Registered as a Newspaper

பக்கங்கள் – 12

விலை – ரூபா 50


# உதயன்

சுடர் : 39
கதிர் : 188

சனிக்கிழமை
01 ஜூன் 2024

வைகாசி 19 ஆம் நாள்
வள்ளுவர் ஆண்டு 2055

முச்சந்தி முரளி



“எந்தப்பக்கம் திரும்பினாலும் ஒரே 3ஏ' மழைதான் பொழியுது பாருங்கோ”

# தமிழ்க் கட்சிகளை ஓரணியாக்க ஊடகங்களால்தான் முடியும்

## ஊடகங்களும் பொதுநிலைப்பாட்டை எடுக்கவேண்டும் என்கிறார் சரவணபவன்



யாழ்ப்பாணம், ஜூன் 1

தமிழ்த் தரப்புகள் பிரிந்து நிற்பதை ஜனாதிபதி ரணில் முதற்கொண்டு பலரும் எள்ளிநகையாடுகின்றனர். தமிழ்த் தரப்புகளை பொதுநிலைப்பாட்டை நோக்கிக் கொண்டுவருவதற்கு ஊடகங்களால்தான் முடியும். ஊடகங்கள் பொதுநிலைப்பாட்டை எடுத்து மக்களையும் அதற்குள் உள்வாங்கி இதைச் செய்யமுடியும் – இவ்வாறு இலங்கைத் தமிழரசுக் கட்சியின் முக்கியஸ்தரும் நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினரும் உதயன் குழுமத் தலைவருமான ஈ.சரவணபவன் தெரிவித்தார்.

11

உயர்தரப் பரீட்சைப் பெறுபேறு:

## 173,444 பேர் பல்கலைக்குத் தகுதி

190 பேரின் பெறுபேறுகள் நிறுத்தம்

கொழும்பு, ஜூன் 1

2023ஆம் ஆண்டுக்கான கல்விப் பொதுத் தராதரப் பத்திர உயர்தரப் பரீட்சைப் பெறுபேறுகள் நேற்று வெள்ளிக்கிழமை பிற்பகல் வெளியாகின. 2 இலட்சத்து 69 ஆயிரத்து 613 பேர் பரீட்சைக்குத் தோற்றிய நிலையில்

04

## தமிழ் மத்திய மகா வித்தி. வவுனியாவில் முன்னிலை

வவுனியா, ஜூன் 1

வவுனியா தமிழ் மத்திய மகா வித்தியாலயம், உயர்தரப் பரீட்சைப் பெறுபேறுகளின் அடிப்படையில் வவுனியா மாவட்டத்தில் முன்னிலை பெற்றுள்ளது.

கணிதப்பிரிவில் முதல் 10 இடங்களில் 8 இடங்களைதன் வசப்படுத்தியுள்ளது. மாவட்ட ரீதியில் முதலாம்

04



யாழ்ப்பாணத்தில் கலைத்துறையில்

## மீன் வியாபாரியின் மகள் மாவட்டத்தில் முதலிடம்!

யாழ்ப்பாணம், ஜூன் 1

க.பொ.த. உயர்தரப் பரீட்சையின் முடிவுகள் நேற்று வெளியான நிலையில், யாழ். மாவட்டத்தில் கலைப் பிரிவில் வஜினா பாலகிருஷ்ணன் மாவட்ட ரீதியில் முதலாமிடத்தையும், நாடளாவிய ரீதியில் 32

11

நூலகம் எரியூட்டப்பட்டமை:

## திகதி குடிப்பத்தின் பின்னால் மிகப்பெரிய அரசியல்!

ஆவணப் பட இயக்குநர் சோமீதரன் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், ஜூன் 1

எங்கள் கண்முன்னே ஜூன் முதலாம் திகதி நடந்த ஒரு வரலாற்றுத் துயரைக் கூட, மே 31 எனச் சிலர் கட்டமைப்பதிலும் ஓர் அரசியல் மறைந்தே இருக்கிறது. அது தொடர்பாக நாம் விழிப்பாக இருப்பதோடு, மீளநிகழாமையையும் உறுதிப்படுத்தவேண்டும் - இவ்வாறு தெரிவித்தார் யாழ்.நூலக எரிப்பு தொடர்பான ஆவணப்படத்தின் இயக்குநரான எஸ்.சோமீதரன்

11

## பொதுநூலக எரிப்பின் நினைவேந்தல் இன்று

யாழ்ப்பாணம், ஜூன் 1

யாழ்ப்பாணப் பொதுநூலக எரிப்பின் 43 ஆவது ஆண்டு நினைவேந்தல் நிகழ்வு இன்று சனிக்கிழமை மாலை 5 மணியளவில் யாழ்ப்பாணம் பொதுநூலக முன்றிலில் தமிழ்த் தேசிய மக்கள்

04

## தமிழரசுக் கட்சி வழக்கு; ஜூலை 19 வரை ஒத்திவைப்பு

ஒருமித்த சமர்ப்பணத்துக்கு கால அவகாசம் கோரிய சுமந்திரன்

யாழ்ப்பாணம், ஜூன் 1

இலங்கைத் தமிழரசுக் கட்சியின் புதிய நிர்வாகிகள் தெரிவு தொடர்பில் திருகோணமலை மாவட்ட நீதிமன்றம் ஏற்கனவே விதித்திருந்த கட்டாணை உத்தரவு நேற்று மீண்டும் ஜூலை 19ஆம் திகதி வரை நீடிக்கப்பட்டுள்ளது.

இதுவரை எதிராளிகள் தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட

04

## தமிழ்ப் பொதுவேட்பாளர்: பெருகுகிறது ஆதரவு

யாழ்ப்பாணம், ஜூன் 1

ஜனாதிபதித் தேர்தலில் தமிழ்ப் பொதுவேட்பாளரை நிறுத்துவதென எடுக்கப்பட்டுள்ள தீர்மானத்துக்கு சாவகச்சேரி கைத்தொழில் வணிகர் மன்றம், சாவகச்சேரி

04

## யாழ். இந்து முன்னிலையில்

யாழ்ப்பாணம், ஜூன் 1

க.பொ.த. உயர்தரப் பரீட்சைப் பெறுபேறுகள் நேற்று மாலை வெளியான நிலையில் யாழ். மாவட்டத்தில் யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி முன்னிலை பெற்றுள்ளது.

யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியில் 56 மாணவர்கள் 3ஏ பெறுபேறுகளையும், யாழ். வேம்படி மகளிர் கல்லூரியில் 30 மாணவிகள் 3ஏ பெறுபேற்றையும் பெற்றுள்ளனர்.

04

## தற்காலிக ஆசிரியரால் தாக்குதல்

யாழ்ப்பாணம், ஜூன் 1

வலிகாமம் கல்வி வலயத்துக்குட்பட்ட குப்பிளானிலுள்ள பாடசாலை

11

## எரிபொருள் விலை குறைப்பு

கொழும்பு, ஜூன் 1

இலங்கை பெற்றோலிய கூட்டுத்தாபனம் எரிபொருள்

04

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விதிமுறைகள் பின்பற்றப்படாத சுண்ணக்கல் அகழ்வுக்குத் தடை

ஒருங்கிணைப்புக்குழுவில் தீர்மானம்

**யாழ்ப்பாணம், ஜூன் 1**

**யாழ். மாவட்டத்திலிருந்து வெளிமாவட்டங்களுக்கு உரியவழித்தட அனுமதிப்பத்திரமின்றி சுண்ணாம்புக்கல் கொண்டுசெல்வதற்குத் தடை விதிக்கப்பட்டுள்ளது.**



யாழ்ப்பாணம் மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக்கூட்டம், யாழ்ப்பாணம் மாவட்ட செயலகத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்றது.

இதன்போது, யாழ்ப்பாணம் மாவட்டத்தில் சுண்ணக்கற்கள் வகைதொகையின்றி அகழப்படுகின்றன என்றும், அவை எந்த அனுமதியும் இல்லாமல் வெளிமாவட்டங்களுக்குக் கடத்தப்படுகின்றன என்றும் சுட்டிக்காட்டப்பட்டது.

சுண்ணக்கல் அகழ்வால் ஏற்படும் பாதிப்புகள் குறித்தும், ஒருங்கிணைப்புக் குழுக்கூட்டத்தில் விளக்கமளிக்கப்பட்டது. இதையடுத்தே, சட்டவிரோமாக சுண்ணக்கல் அகழ்வதற்குத் தடைவிதிக்கப்பட வேண்டும் என்றும், அனுமதி பெற்று அகழப்படும் சுண்ணக்கற்கள்கூட வெளிமாவட்டங்களுக்குக் கொண்டுசெல்லப்படக்கூடாது என்றும் வலியுறுத்தப்பட்டு, அந்த முடிவு தீர்மானமாக நிறைவேற்றப்பட்டது. (ச-26,125)



## சங்கிலியனின் நினைவு நேற்றுக் கடைப்பிடிப்பு!

யாழ்ப்பாணம், ஜூன் 1

யாழ். இராச்சியத்தின் கடைசித் தமிழ் மன்னன் இரண்டாம் சங்கிலியனின் 405 ஆவது நினைவுதின நிகழ்வு நல்லூரில் அமைந்துள்ள சங்கிலியன் சிலையடியில் நேற்று இடம்பெற்றது.

சிவசேனை அமைப்பின் தலைவர், மறவன்புலவு க.சச்சிதானந்தன் தலைமையில் இந்த நிகழ்வுகள் இடம்பெற்றன.

நிகழ்வில் யாழ்.மாநகரசபையின் ஆணையாளர் ச.கிருஷ்ணேந்திரன், யாழ். பல்கலைக்கழக முகாமைத்துவக் கற்கைகள் வணிகபீட ஓய்வுநிலைப் பீடாதிபதி பேராசிரியர் க.தேவராஜா, மருத்துவர் த.குகதாசன், தொழிலதிபர்களான ஈ.எஸ்.பி.நாகரத்தினம், ந.திவாகர் உள்ளிட்ட பலரும் கலந்துகொண்டனர். (ம-25,66)



## புகைத்தலுக்கு எதிராக நேற்றுக் கவனவீர்ப்பு

யாழ்ப்பாணம், ஜூன் 1

சர்வதேச புகைத்தல் எதிர்ப்பு தினத்தை முன்னிட்டு, யாழ்ப்பாணம் சங்கானை பேருந்து நிலையத்துக்கு முன்பாக நேற்றுக் கவனவீர்ப்புப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

வட பிரதேச நல்லொழுக்க சம்மேளனத்தின் ஏற்பாட்டில் இடம்பெற்ற இந்தப் போராட்டத்தில், சங்கானை பிரதேச செயலர் கவிதா உதயகுமார், சங்கானை பிரதேச செயலக உத்தியோகத்தர்கள், ஹெல்தி லங்கா நிறுவனத்தினர், வடபிரதேச நல்லொழுக்க சம்மேளனத்தினர் மற்றும் பொதுமக்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர். (ம-25,125)

## சட்டவிரோத மரக்காலை ஒருவர் கைதானார்!

யாழ்ப்பாணம், ஜூன் 1

வட்டுக்கோட்டை தெற்குப்பகுதியில், சட்டவிரோதமான முறையில், மரக்காலையை நடத்தி வந்த குற்றச்சாட்டில் ஒருவர் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

யாழ்.மாவட்ட வனவளப் பாதுகாப்புத் திணைக்களத்தினருக்குக் கிடைத்த புலனாய்வுத் தகவலுக்கமைய சம்பவ இடத்துக்கு விரைந்த திணைக்களத்தினர், குறித்த மரக்காலையின் உரிமையாளரைச் சந்தேகநபராகக் கைதுசெய்து, மல்லாகம் நீதிவான் நீதிமன்றத்தில் முற்படுத்தினர். இதன்போது, சந்தேகநபர் குற்றச்சாட்டை ஒப்புக்கொண்டதையடுத்து, அவருக்கு மல்லாகம் நீதிமன்றத்தால் 3 ஆயிரம் ரூபா தண்டப்பணம் விதிக்கப்பட்டுள்ளது. (ப-125)

## யாழ். மாவட்டத்தில் போதைப்பொருள் தொடர்பில் 15 நாள்களில் 180 வழக்குகள்!

யாழ்ப்பாணம், ஜூன் 1

யாழ். மாவட்டத்தில் கடந்த ஏப்ரல் 15ஆம் திகதி முதல் மே மாதம் 30ஆம் திகதி வரையான காலப்பகுதியில் போதைப்பொருள் கைதுகள் தொடர்பில் 180 வழக்குகள் பதிவுசெய்யப்பட்டுள்ளன என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

யாழ்.மாவட்ட செயலகத்தில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற மாவட்ட ஒருங்கிணைப்புக்குழுக் கூட்டத்தில் இந்த விடயம் சுட்டிக்காட்டப்பட்டது.

அதற்கமைய ஹெரோய்ன் போதைப்பொருள் தொடர்பில் 51 வழக்குகளும், ஐஸ் போதைப்பொருள் தொடர்பில் 8 வழக்குகளும், கஞ்சா போதைப்பொருள் தொடர்பில் 121 வழக்குகளும் தாக்கல் செய்யப்பட்டுள்ளன.

யாழ். மாவட்டத்தின் யாழ். பொலிஸ் பிராந்தியம் மற்றும் காங்கேசன்துறை பொலிஸ் பிராந்தியத்தில் முன்னெடுக்கப்பட்ட சோதனை நடவடிக்கையிலேயே இந்தப் போதைப்பொருள்கள் கைப்பற்றப்பட்டன என்றும் பொலிஸார் மேலும் தெரிவித்துள்ளனர். (ச-125)

## அங்குரார்ப்பண நிகழ்வு

கொழும்பு, ஜூன் 1

இலங்கை அந்திமகால சிகிச்சை மருத்துவக் கல்லூரி ஏற்பாடு செய்திருந்த, இலங்கை அந்திமகால பராமரிப்போர் கூட்டமைப்பின் அங்குரார்ப்பண நிகழ்வு, 'BMICH' இல் அண்மையில் இடம்பெற்றது. சுகாதார அமைச்சின் செயலாளர் மருத்துவர் பாலித மஹிபால, சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் ஆகியோர் கலந்துகொண்டனர்.

கடந்த 3 ஆண்டுகளில், குறித்த கூட்டமைப்பு பல்வேறு களங்களில், குறிப்பாக திறன் மேம்பாடு மற்றும் அதற்கு அப்பால் அதன் பல்வேறு குழுக்களின் கூட்டு முயற்சிகளால் முன்னேற்றங்களைச் செய்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (ப)






சர்வதேச புகைத்தல் மற்றும் போதை எதிர்ப்பு தினத்தை முன்னிட்டு நல்லூர்ப் பிரதேச செயலக சமுர்த்திப் பிரிவின் ஏற்பாட்டில், யாழ்ப்பாணத்தில் நேற்றுப் பேரணி இடம்பெற்றது. இதன்போது சமுர்த்தி அதிகாரிகள், நல்லூர்ப் பிரதேச செயலக உத்தியோகத்தர்கள், சமுர்த்திப் பயனாளிகள், பொதுமக்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர். (ம-25,20)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கையில் இடம்பெற்றது இனப்படுகொலை இல்லை!

## கனேடியப் பிரதிநிதியிடம் சுட்டிக்காட்டு

யாழ்ப்பாணம், ஜூன் 1

**இலங்கையில் இடம்பெற்றது இனப்படுகொலை இல்லை என்று கனேடிய பிரதியமைச்சர் கிறிஸ்டோபர் மக்லீனிடம் இலங்கையின் வெளிவிவகார அமைச்சின் செயலாளர் சுட்டிக்காட்டியுள்ளார்.**

முள்ளிவாய்க்கால் அஞ்சலிப்புத் தினமாக மே மாதம் 18ஆம் திகதியன்று, இலங்கையில் இடம்பெற்றது இனப்படுகொலை என்று கனேடியப் பிரதமர் ட்ரூடோ உள்ளிட்ட கனேடிய அரசியல்வாதிகள் பலரும் வலியுறுத்தியிருந்தனர்.

இது தொடர்பான அஞ்சலிக் கூட்டங்களிலும், இலங்கையில் இனப்படுகொலை இடம்பெற்றது என்பதாகவே வலியுறுத்தப்பட்டது.

இதற்குக் கண்டனம் தெரிவித்த இலங்கை அரசாங்கம், இலங்கையில் இனப்படுகொலை இடம்பெறவில்லை என்றும், இலங்கைக்குள் மேற்கொள்ளப்படும் உள்ளக அமைதி முயற்சிகளுக்கு கனடாவின் அறிவிப்புத் தடையாக உள்ளதாகவும் சுட்டிக்காட்டியிருந்தது. இந்த நிலையிலேயே, இலங்கைக்கு வந்துள்ள கனேடிய பிரதியமைச்சர் கிறிஸ்டோபர் மக்லீனிடம் இலங்கையில் இடம்பெற்றது இனப்படுகொலை இல்லை என்று வெளிவிவகார அமைச்சின் செயலாளர் அருணிவிஜய வர்த்தன சுட்டிக்காட்டியுள்ளார். வெளிவிவகார அமைச்சின் செயலாளருடைய கருத்தை உரிய அதிகாரிகளிடம் தெரிவிப்பதாக, கனேடிய பிரதியமைச்சர் கிறிஸ்டோபர் தெரிவித்தார். (ம-25-6)

# சம்பள முரண்பாடுகளை தீர்ப்பதற்கு நிபுணர் குழு

கொழும்பு, ஜூன் 1

எதிர்வரும் ஆண்டு வரவு - செலவுத் திட்டத்தினூடாக சம்பள முரண்பாடுகளைத் தீர்ப்பதற்குத் தேவையான பரிந்துரைகளை வழங்க பங்குதாரர்களை உள்ளடக்கிய நிபுணர் குழுவொன்றை நியமிக்க அமைச்சரவை தீர்மானித்துள்ளது என்று நிதி இராஜாங்க அமைச்சர் ரஞ்சித் சியாம்பலாபிட்டிய தெரிவித்துள்ளார்.

ஊழியர்கள் மேற்கொள்ளும் போராட்டங்கள் மற்றும் வேலை நிறுத்தங்கள் இறுதியில் ஒட்டுமொத்த பொதுமக்களையும் சங்கடப்படுத்தும் என இராஜாங்க அமைச்சர் மேலும் தெரிவித்துள்ளார். (ச-இ)



சர்வதேச புகைத்தல் மற்றும் போதை எதிர்ப்பு தினத்தை முன்னிட்டு மன்னார் மாவட்ட சமுர்த்தி அபிவிருத்தி திணைக்களத்தின் ஏற்பாட்டில் மரதன் ஓட்டப்போட்டி அண்மையில் இடம்பெற்றது. (ம-25-213)

# மருத்துவர் பற்றாக்குறையால் நாட்டில் மருத்துவ நெருக்கடி

கொழும்பு, ஜூன் 1

மருத்துவர்கள் பற்றாக்குறையால், நாட்டின் மருத்துவக் கட்டமைப்பு நெருக்கடிக்குள் தள்ளப்பட்டுள்ளது என்று அரச மருத்துவ அதிகாரிகள் சங்கம் எச்சரித்துள்ளது.

அரச மருத்துவ அதிகாரிகள் சங்கத்தின் ஊடகப் பேச்சாளர் சம்மில் விஜயசிங்க மேலும் தெரிவித்ததாவது:-

இலங்கையில் அங்கீகரிக்கப்பட்ட மருத்துவர்களின் எண்ணிக்கை ஆறு வருடங்களாகப் புதுப்பிக்கப்படவில்லை. அதிகமான மருத்துவர்களுக்குப் பயிற்சியளித்து தேவையான மருத்துவர்களை பணிக்குள் உள்ளீர்க்கவேண்டும் என ஜனாதிபதியிடம் தொடர்ந்து கூறிவருகின்றோம்.

அரசானது புதிய மருத்துவமனைகள் மற்றும் சிகிச்சை பிரிவுகளை விரிவுபடுத்தியபோதிலும் அவற்றுக்கு மருத்துவர்களை நியமிக்க முன்வரவில்லை. சில புதிய மருத்துவமனைகளில் நவீன மருத்துவ உபகரணங்கள்கூட காலாவதியாகிவிட்டன. இதனால் நாட்டில் மருத்துவமனை அமைப்பு மிகவும் மோசமாகி வருகிறது - என்றார். (ச)

# மைத்திரிக்கு எதிராக நீதிமன்ற அவமதிப்பு

கொழும்பு, ஜூன் 1

நீதிமன்றத்தை அவமதித்ததாக முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுக்கு எதிராக மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் மனுதாக்கல் செய்யப்பட்டுள்ளது.

சுதந்திரக் கட்சியின் செயற்குழு உறுப்பினர் மான்டேக் சரத்சந்திரவால் இந்த மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

சுதந்திரக் கட்சியின் தலைவராக செயற்படுவதைத் தடுத்து, கொழும்பு மாவட்ட நீதிமன்றம் பிறப்பித்த கட்டளையை மீறும்வகையில் மைத்திரிபால சிறிசேன செயற்பட்டார் என்று அந்த மனுவில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. (ச-இ)

# வாகன இறக்குமதி; படிப்படியாக வழமைக்கு!

வாகன இறக்குமதியை மீள அங்கீகரிப்பது தொடர்பில் ஆராய்வதற்காக நியமிக்கப்பட்ட அமைச்சர்கள் குழுவின் பரிந்துரைகள் ஜனாதிபதிக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளன என்று அரசாங்க தகவல்கள் தெரிவித்துள்ளன.

அதன்படி, வாகன இறக்குமதித் தடையை 4 நிலைகளில் தளர்த்துவதற்கு கால அவகாசத்தை அந்தக்குழு பரிந்துரைத்துள்ளது.

முதலில் வர்த்தக வாகனங்கள், பின்னர் பொதுப் போக்குவரத்துச் சேவை வாகனங்கள், அதன் பின்னர் மோட்டார் சைக்கிள்கள், முச்சக்கர வண்டிகள் மற்றும் இறுதியாக கார்கள் மற்றும் சொகுசு வாகனங்களை இறக்குமதி செய்வது தொடர்பில் பரிந்துரைகள் வழங்கப்பட்டுள்ளன.

வாகன இறக்குமதி மீதான கட்டுப்பாடுகளை அரசாங்கம் படிப்படியாக தளர்த்தினால் வெளிநாட்டு கையிருப்பு பிரச்சினை ஏற்படாது என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச-இ)

# தினம் தெரியுமோ?

நேற்றைக்கு ஏ.எல். எக்ஸாம் ரிசல்ட் வந்திட்டுது. பேஸ்புக் முழுக்க நல்ல ரிசல்ட் எடுத்தவைக்கு பொழியத்தொடங்கின வாழ்த்துமழை இன்னும் ஓயேலை. எதிர்பார்த்தமாதிரி 'பிரபலமான'பள்ளிக்கூடங்களிலதான் கனபேர் பாஸாகி இருக்கினம். ஆனால் இப்பிடி ரிசல்டை எடுக்கிறதுக்காக அந்த முன்னணிப் பள்ளிக்கூடங்கள் பிள்ளையளைப் போட்டு எப்பிடியெல்லாம் வதைக்கினம் எண்டது அந்தப் பிள்ளையளுக்கும், பெற்றோருக்கும் தான் தெரியும். அப்பிடி ஒரு வதை வவுனியாவில இருக்கிற பேமஸான பெண்கள் பள்ளிக்கூடத்தில நடந்திருக்கு.

அந்தப் பள்ளிக்கூடத்தில, ஏ.எல். படிக்கிற ஆக்களுக்கு கிட்டடியில தவணைச்சோதினை நடந்தது. அதில கணிதபாடம் எடுக்கிற பிள்ளையள் வழக்கம் மாதிரி, எக்ஸாம் எழுதிப்போட்டு, விடைப்பேப்பரை குடுக்க எழும்பியிருக்கினம். ஆனால் அந்தச் சோதினை எழுதின 12 பேரிட்ட 'உங்கட வரவு பத்தாது' எண்டு சொல்லி, பேப்பரை வாங்கமாட்டம் எண்டு பள்ளிக்கூட நிர்வாகம் சன்னதம் ஆடியிருக்குது. பிள்ளையளுக்கு என்ன செய்யிறதெண்டு தெரியேலை. அப்பிடியே பேப்பரைப் பிடிச்சபடி கனநேரமா நிண்டிருக்கினம். ஆனால் பள்ளிக்கூடக்காரர் வாங்கிற பிளானில்லை. பள்ளிக்கூடம் பூட்டுற நேரமும் வந்திட்டுது. அதுக்குப் பிறகும் அங்க நிக்க ஏலாது. விடைப்பேப்பரை வீட்டை கொண்டுபோகட்டும் திருப்பிக் கொண்டந்து குடுக்க ஏலாது. அதால அந்தப் 12 பிள்ளையளும் தங்களுக்குள்ள கதைச்சுப் பேசி,விடைத்தாளை தங்கட வகுப்பறைக்குள்ள இருந்த அலுமாரிக்குள்ள வைச்சிட்டுப் போயிருக்கினம்.

இந்த விசயம் எப்பிடியோ வெளியாலபோய், மீடியாக்காரர் அதை நோண்டத் தொடங்க, பள்ளிக்கூடக்காரர் எப்படியாவது இதை பரவவிடாமல் அமத்த வெளிக்கிட்டிட்டினம். விடைத்தாளை வாங்காமல் விட்ட 12 பிள்ளையளின்ர பெற்றோரை ஒருகிழமைக்குப் பிறகு பள்ளிக்கூடத்துக்கு கூப்பிட்டிருக்கினம். 'எங்கட பிள்ளையளின்ர வரவு பத்தாததாலதான் , அது பிழை எண்டு அவையை உணரப்பண்ணத்தான், உடனடியாக பேப்பரை வாங்காமல் விட்டவை. எண்டாலும் தாமதித்து அதை வாங்கிப்போட்டினம்' எண்டு அந்தப் பெற்றோர் கடிதம் எழுதிக்குடுத்தபிறகுதான், அந்தப் பிள்ளையள் அலுமாரிக்குள்ள வைச்சிட்டுப் போன விடைப்பேப்பரை வாங்கியிருக்கினம். இப்ப அந்தப் பேப்பர்களைத் திருத்திக் குடுத்திட்டினமாம்.

பிள்ளையளின்ர வரவு பத்தாது எண்டால், அதைப் பற்றி உடனேயே பெற்றாரைக் கூப்பிட்டு, 'ஏன் வரேலை? என்ன பிரச்சினை?'எண்டெல்லாம் கேட்டு, 'இனி இப்பிடி நிக்காமல் அவையை ஒழுங்கா அனுப்ப வேணும்' எண்டு சொல்லியிருந்தால், பெற்றாரே தங்கட பிள்ளையள் ஒழுங்கா வர வழி பார்த்திருப்பினம். அதைவிட்டிட்டு, இப்பிடி பிள்ளையளை எக்ஸாம் எழுத விட்டிட்டு, விடைப் பேப்பரை வாங்காமல் அவமானப்படுத்தினால், அதுகள் பிழையா ஏதும் முடிவெடுத்திருக்கவும் கூடும். அப்பிடி ஒண்டு நடந்தபிறகு, குய்யோ முறையோ எண்டு ஒப்பாரி வைக்காமல்,பிள்ளையளைப்பக்குவமாகையாண்டால் உந்தப் பள்ளிக்கூடக்காரர் குறைஞ்சோ போடுவினம்?

-பட்சி

padsi@uthayan.com

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காலாவதியான வெடிபொருள்கள்; உக்ரைனுக்கு இலங்கை விற்பனை

## ரஷ்ய - இலங்கை உறவைப் பாதிக்கும் என எச்சரிக்கை

இலங்கையிலிருந்து காலாவதியான வெடி மருந்துகள் உக்ரைனுக்கு அனுப்பப்படுவதாக 'ரஷ்யா ருடே' செய்தி வெளியிட்டுள்ளது.

அந்தச் செய்தியில், காலாவதியான வெடி மருந்துகள் வர்ணம் பூசப்பட்ட பின் போலந்துக்கு எடுத்துச்செல்லப்பட்டு அங்கிருந்து உக்ரைன் போர்க்களத்துக்கு எடுத்துச்செல்லப்படுகின்றன. கொஸ்மிக் ரெக்னோலொஜிஸ் பிரைவேட் லிமிட்டெட் என்ற நிறுவனமே இந்த வர்த்தகத்தில் ஈடுபடுகின்றது. 300 மில்லியன் டொலருக்கு இந்த வெடி மருந்துகள் விற்பனை செய்யப்பட்டுள்ளன. இலங்கையும் ரஷ்யாவும் நீண்டகால நட்பு நாடுகள். குறுகியகால பொருளாதார நலன்களுக்காக நீண்டகால நட்பை முறிக்கும் விடயங்களில் இலங்கை சமரசம் செய்யக் கூடாது என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

இதேவேளை – இது தொடர்பில் பாதுகாப்பு அமைச்சின் பேச்சாளர் நளின் ஹேரத் தெரிவித்ததாவது:–

இலங்கையில் மேலதிகமாக உள்ள வெடி மருந்துகளை உக்ரைனுக்கு விற்பனை செய்வதற்கு போலந்து இடைத்தரகர்களைப் பயன்படுத்துகின்றது என வெளியாகியுள்ள தகவல்களை நாம் நிராகரிக்கின்றோம்.

இவ்வாறான தகவல்களில் எந்த உண்மையும் இல்லை. ஆதாரங்களும் இல்லை. எனினும் காலாவதியான வெடிமருந்துகள் இராணுவத்தின் முகாம்களில் சேமித்து வைக்கப்பட்டுள்ளன.

இந்த வெடிமருந்துகள் பாதுகாப்பு அமைச்சுக்குச் சொந்தமானவை இல்லை. தனியாருக்குச் சொந்தமானவை. பாதுகாப்பு கரிசனைகள் காரணமாக இவற்றை அகற்றுமாறு அந்த நிறுவனத்தைக் கேட்டுக்கொண்டுள்ளதாகக் குறிப்பிட்டுள்ளார். (அ–ஓ–6)

### உயர்தரப்...

ஒரு இலட்சத்து 73 ஆயிரத்து 444 பேர் பல்கலைக்கழகத்துக்கு தகுதி பெற்றுள்ளதுடன், 190 பரீட்சார்த்திகளின் பரீட்சைப் பெறுபேறுகள் இடைநிறுத்திவைக்கப்பட்டுள்ளன.

இதேவேளை - பரீட்சை மீளாய்வு செய்வதற்காக எதிர்வரும் 5 ஆம் திகதி முதல் 19 ஆம் திகதி வரை விண்ணப்பிக்க முடியுமெனப் பரீட்சைகள் திணைக்களம் தெரிவித்துள்ளது. (அ-ஓ-66)

### தமிழ்...

இடத்தை ஆ.ஜிலோட்சன் பெற்றுள்ளார்.

இதேவேளை - விஞ்ஞானப் பிரிவில் பத்து இடங்களில் மூன்று இடங்களை வவுனியா தமிழ் மத்திய மகா வித்தியாலய மாணவர்கள் பெற்றுள்ளார்கள்.

இதேவேளை - ஈ -ரெக்கில் முதலாம், மூன்றாம் இடங்களை வவுனியா தமிழ் மத்திய மகா வித்தியாலய மாணவர்கள் பெற்றுள்ளதோடு முதலாம் இடத்தை கமலநாதன் லோகநாதன் பெற்றுள்ளார்.

பி- ரெக்கில் 7 ஆம் இடத்தையும் வர்த்தக பிரிவில் முதல் 10 இடத்தில் மூன்றாம் மற்றும் ஐந்தாம் இடங்களை வவுனியா தமிழ் மத்திய மகா வித்தியாலய மாணவர்கள் பெற்றுள்ளனர். (அ-ஓ-110)

### யாழ். இந்து...

வடமராட்சியின் பிரபல பாடசாலையான ஹாட்லிக் கல்லூரியில் 21 மாணவர்கள் 3ஏ பெறுபேறையும், பருத்தித்துறை மெதடிஸ் பெண்கள் உயர்தரப் பாடசாலையில் 9 மாணவிகள் 3ஏ பெறுபேற்றையும் பெற்றுக்கொண்டுள்ளனர். (ஓ-5-100)

### தமிழ்ப்...

கூட்டுறவுச் சபை மற்றும் யாழ். மாவட்டப் பாரவூர்திகள் சங்கம் ஆகிய மூன்று பொது அமைப்புகள் தமது ஆதரவை வெளியிட்டுள்ளன.

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் தமிழ்ப் பொதுவேட்பாளர் தொடர்பாகச் சிவில் சமூக கூட்டிணைவுச் செயற்பாட்டாளர்கள் நடத்தி வரும் தொடர்ச்சியான சந்திப்புகளின் வரிசையில் நேற்று வெள்ளிக்கிழமை மேற்படி அமைப்புகளின் நிர்வாகிகள் மற்றும் உறுப்பினர்களுடனான நேரடிச் சந்திப்பும் கலந்துரையாடலும் அந்தந்த அமைப்புகளின் அலுவலகங்களில் தனித்தனியாக இடம்பெற்றது.

மூன்று சந்திப்புகளும் வெற்றிகரமாக அமைந்ததாகவும், சந்திப்பில் கலந்து கொண்ட மூன்று பொது அமைப்புகளைச் சேர்ந்தவர்களும் தமிழ்ப் பொது வேட்பாளர் என்ற எண்ணக்கருவுக்கு தமது முழுமையான ஆதரவை வழங்குவதற்கு உடன்பட்டிருப்பதாகவும் சந்திப்பில் கலந்துகொண்ட சிவில் - சமூக கூட்டிணைவுச் செயற்பாட்டாளர்கள் தெரிவித்தனர். (அ-ஓ-66)

### பொதுநூலக...

முன்னணியின் ஏற்பாட்டில் நடைபெறவுள்ளது. இந் நிகழ்வில் அனைவரையும் கலந்துகொள்ளுமாறு தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் பொதுச் செயலாளர் செல்வராசா கஜேந்திரன் அழைப்பு விடுத்துள்ளார். (அ-ஓ-66)

### எரிபொருள்...

களின் விலையை நேற்று நள்ளிரவு முதல் குறைத்துள்ளது.

ஒக்ரேன் 92 ரக பெற்றோல், 13 ரூபா குறைப்புச் செய்யப்பட்டு புதிய விலையாக 355 ரூபா நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

ஓட்டோ டீசல் 16 ரூபாவால் குறைக்கப்பட்டு புதிய விலை ரூ. 317 ஆக நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

மண்ணெண்ணெய் 13 ரூபாவால் குறைக்கப்பட்டு 202 ரூபாவாக நிர்ணயிக்கப்பட்டுள்ளது. சுப்பர் டீசல் மற்றும் ஒக்ரேன் 95 ரக பெற்றோலின் விலைகளில் எவ்வித மாற்றமும் மேற்கொள்ளப்படவில்லை. (ஓ-இ)

### தமிழரசுக்...

ஆட்சேபனைகள் தொடர்பில் தமது தரப்பு அவதானங்களை வழக்காளியின் சட்டத்தரணி எடுத்துரைத்தார். ஏழு பிரதான எதிராளிகளும் மூன்று வெவ்வேறு விதமான நிலைப்பாட்டை எடுத்துள்ளனர். அவற்றுக்கு இடையே இணக்கமான ஒரு நிலைப்பாட்டைக் கண்டு, சுமுகமாக விடயத்தைத் தீர்ப்பது சாத்தியமற்றது என்று வழக்காளி தரப்புச் சட்டத்தரணி மன்றில் சுட்டிக்காட்டினார்.

இதன்போது எதிராளிகள் தரப்பில் முன்னிலையான ஜனாதிபதி சட்டத்தரணிகளான தவராசா மற்றும் புவிதரன் ஆகியோர் வழக்காளி கோரும் நிவாரணங்களை ஒருமித்து உடனடியாகவே வழங்க முடியும் என்று குறிப்பிட்டனர்.

எதிராளிகள் தரப்பில் தமக்காகத் தாமே நேரில் முன்னிலையான ஜனாதிபதி சட்டத்தரணி எம்.ஏ.சுமந்திரன், இது விடயத்தில் கட்சி ரீதியாக எதிராளிகள் அனைவரும் இப்போது ஒன்றுபட்ட தீர்மானத்தை எடுத்துள்ளனர். அதன் அடிப்படையில் ஒரே நிலைப்பாட்டுடன் பதில் மனுக்களை அவர்கள் சமர்ப்பிப்பார்கள். அந்தச் சமர்ப்பணத்தின் அடிப்படையில் இணக்கமான முடிவு ஒன்றுக்கு வழக்காளியும் எதிராளிகளும் வரமுடியும். அவ்வாறு சமர்ப்பிப்பதற்கு கால அவகாசம் தேவை என்று குறிப்பிட்டார்.

அதை நீதிமன்றம் ஏற்றுக்கொண்டு அந்தப் பதில் மனுக்களைத் தாக்கல் செய்வதற்கு ஜூலை 19ஆம் திகதி வரை கால அவகாசம் வழங்கி, வழக்கை அந்தத் திகதிக்கு ஒத்திவைத்தது.

இதற்கிடையில், கிளிநொச்சியைச் சேர்ந்த கட்சி உறுப்பினரான சண்முகராஜா ஜீவராஜா என்பவர் தம்மையும் இடையீட்டு எதிராளியாகச் சேர்த்துக் கொள்ளும்படி விண்ணப்பித்தார். எதிராளிகள் தரப்பில் அவரை ஓர் எதிராளியாகச் சேர்த்துக்கொள்வதற்கு ஆட்சேபனை ஏதும் தெரிவிக்கப்படவில்லை. (அ-ஓ-50)


## முதலாம் ஆண்டு நினைவுதின அழைப்பு



கடந்த 12.06.2023 திங்கட்கிழமை இறைபதமெய்திய
எங்கள் அன்புச் செல்வம்

**அமரர் அகிலன் அனுஷன்**

அவர்களின் முதலாம் ஆண்டு நினைவுதின நிகழ்வுகள் இன்று 01.06.2024 சனிக்கிழமை, முற்பகல் 11.00 மணியளவில் அன்னாரது இல்லத்தில் நடைபெற இருப்பதால் அத்தருணம் தாங்கள் அனைவரும் வருகைதந்து அன்னாரது ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதிய போசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

ஓராண்டு கடந்துவிட்டது
எம்மைவிட்டு நீ பிரிந்து
தீராத பெருந்துயரில்
வாடுகிறோம் நாம் இங்கு
உறவுகளை தவிக்கவிட்டு
உதவி செய்து நீ சென்றாய்
எம்மை எல்லாம் அழவிட்டு
காலன் உனை கொன்று சென்றான்
உனது இல்லம் வெறித்துவிட்டது நீயின்றி
எமது மனம் வெதும்புகின்றது
நீ மறைந்த நாள் முதலாய்
நிம்மதி எமக்கு இல்லை
நினைவிழந்து செயலிழந்து
நிர்க்கதியாய் நிற்கின்றோம்
உங்கள் ஆத்மா சாந்தியடைய
இறைவனை வேண்டுகின்றோம்.

கே.கே.எஸ் வீதி
கிழக்கு, இணுவில்.

குடும்பத்தினர்

CS (55234) V-1


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்


# கார்த்திகைப்பூ; வெறும் பூவல்ல, உணர்வு!

இலங்கையின் மிகப்பிரபலமான காலணி தயாரிப்பு நிறுவனமொன்று தனது தயாரிப்புகளில் (காலணிகளில்) கார்த்திகைப்பூவை பொறித்து அதை விற்பனைக்கும் விட்டிருக்கின்றது. கார்த்திகைப் பூவென்பது இலங்கையின் தேசிய மலரல்ல. சிங்கள மக்களின் சித்தாந்தங்களுடன் தொடர்புடையதும் அல்ல. ஆனால், இதேநாட்டுக்குள்வாழ்ந்துகொண்டிருக்கும் இன்னோர் இனக்குழுமத்தின் உணர்வுடன் தொடர்புடைய விடயம் அது என்ற குறைந்தபட்சப் புரிதல் அந்த நிறுவனத்துக்கு இல்லாமலிருக்க வாய்ப்பில்லை. இலங்கையில் புத்தபெருமானின் உருவத்தை உடலில் பச்சை குத்தியவர்களும், பௌத்த சின்னங்கள் அச்சிட்ட ஆடைகளை அணிந்தவர்களும் பௌத்தத்தை அவமதித்ததாக, பௌத்த மதத்தினரின் மனதைப் புண்படுத்தியதாக பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டு, ஸ்ரீலங்காவின் நீதிக் கட்டமைப்பின் அடிப்படையில் நீதிமன்றங்களால் தண்டிக்கப்பட்டிருக்கின்றார்கள். ஸ்ரீலங்காவின் நீதிக்கட்டமைப்பில் கார்த்திகைப்பூவுக்கு எந்தவொரு அரச அங்கீகாரமும் இல்லையென்ற போதிலும், ஒரு மக்கள் கூட்டத்தின் உணர்வு புண்படுத்தப்பட்டிருக்கின்றது என்பது பொதுமைப்பாடான விடயமே. ஆதலால் தமிழர்களின் மனோநிலையை, வலியை அந்த நிறுவனம் புரிந்துகொள்ள வேண்டும்.

வடக்கு மாகாணத்தில் இடம்பெற்ற பாடசாலை இல்லமெய்வன்மைப் போட்டிகளில், கார்த்திகைப் பூவை அலங்கரித்தமைக்காக பாடசாலைகளின் நிர்வாகங்கள் விளக்கத்துக்கு உள்வாங்கப்பட்டமையும், புலனாய்வுப் பார்வை பாடசாலைகளில் பாய்ச்சப்பட்டமையும் யாவரும் அறிந்ததே. புலிகளின் தேசிய அடையாளங்களில் ஒன்றாக இருக்கும் அந்தப் பூ, வரலாற்று நினைவூட்டல்களை வழங்கிவிடும் என்ற பதற்றம்தான் இந்த நடவடிக்கைகளின் பின்னுள்ள ஒரேவிடயம். இவ்வாறிருக்கையில், மேற்படி காலணிகளில் கார்த்திகைப்பூ பொறிக்கப்பட்டமையையும் பொலிஸார் உடன் அறிந்து அவற்றை சந்தையில் இருந்து அப்புறப்படுத்தியிருக்கவேண்டும். அதைச் செய்யாதபட்சத்தில், வலியையும், வேதனையையும், ஆற்றாமையையும் தமிழர்களுக்கு வலிந்து திணிக்கும் ஒரு முயற்சியாக இதைக்கொள்வதில் தப்பில்லை. நியாயமான சந்தேகங்களின் பாற்பட்டு இத்தகைய எண்ணவோட்டத்தை எண்ணிக்கொள்ள முடிகின்றதல்லவா?

உண்மைக்கும், நல்லிணக்கத்துக்குமான ஆணைக்குழுவை அமைத்து, நாட்டின் இனப்பிரச்சினைக்குத் தீர்வைக்காண்பதில் உறுதியாக இருப்பதாக மீண்டும் மீண்டும் தெரிவித்துவரும் ஜனாதிபதி ரணில், இவ்வாறான சீண்டல்களும் தூண்டல்களும்தான் இந்த நாட்டை முப்பது ஆண்டுகால குருதிச் சகதிக்குள் கொண்டுசென்றது என்ற பொதுப்புரிதலை ஏற்படுத்திக்கொள்ள வேண்டும். நீதியைத் தேடுவதற்கு முன்னர், மீண்டும் நிகழாமையை உறுதிப்படுத்துவது தவிர்க்கப்பட முடியாததே. ஆனால், இலங்கை அரசாங்கத்திடம் இல்லாத விடயமும் அதுவே. கார்த்திகைப் பூவை காலணிகளில் பொறித்த விடயத்தில் அதுவே மெய்ப்படுகின்றது. தமிழர்களின் மனங்களில் ஏற்படுத்திய கிலேசத்துக்காகவும், வலிக்காகவும், தொடர்புடைய நிறுவனம் நிபந்தனையற்ற மன்னிப்பைக் கோரவேண்டும். காலணிகளால் கனன்றுகொண்டிருக்கும் நெருப்பு தணிவதற்கு அதுவே ஒரேவழி!







# ஒக்ரோபர் 5ஆம் திகதி ஜனாதிபதித் தேர்தல்!

**கொழும்பு, ஜூன் 1**

**ஒக்ரோபர் 5ஆம் திகதி அல்லது 12ஆம் திகதி ஜனாதிபதித் தேர்தல் நடத்தப்படும் என்று ஐக்கிய தேசியக் கட்சி உறுப்பினரும், ஜனாதிபதியின் சிரேஷ்ட ஆலோசகருமான ஆசு மாரசிங்க தெரிவித்தார்.**

ஜனாதிபதித் தேர்தலை குறைந்தது இரண்டு ஆண்டுகளாவது பிற்போடவேண்டும் என்று ஐக்கிய தேசியக் கட்சியின் பொதுச் செயலர் பாலித ரங்கே பண்டார தெரிவித்துள்ள கருத்தானது பல்வேறு சர்ச்சைகளைத் தோற்றுவித்துள்ள பின்னணியிலேயே, ஒக்ரோபர் 5ஆம் திகதி அல்லது 12ஆம் திகதி தேர்தல் நடத்தப்படும் என்ற அறிவிப்பு ஆசு மாரசிங்கவிடம் இருந்து வந்துள்ளது.

"ஜனாதிபதித் தேர்தலே முதலில் நடத்தப்படும் என்று அமைச்சரவைக்கு ஜனாதிபதி தெரியப்படுத்திவிட்டார். இராஜாங்க அமைச்சர்களுடன் நடைபெற்ற சந்திப்பின்போதும் இதுபற்றி ஜனாதிபதி தெரியப்படுத்தினார். ஜனாதிபதித் தேர்தலுக்கு பாதீட்டில் நிதியும் ஒதுக்கப்பட்டுள்ளது. இலங்கையில் பெரும்பாலும் சனிக்கிழமை நாளொன்றிலேயே தேர்தல் நடத்தப்படும்.

அந்தவகையில் ஒக்ரோபர் 5ஆம் திகதி அல்லது 12ஆம் திகதி ஜனாதிபதித் தேர்தல் நடத்தப்படும்" என்று ஆசு மாரசிங்க மேலும் தெரிவித்தார். (ம-44)

# ரங்கே பண்டாரவை அடக்கி வையுங்கள்

## ஜனாதிபதி ரணிலிடம் ஐ.தே.க.வினர் வலியுறுத்து

கொழும்பு, ஜூன் 1

ஐக்கிய தேசியக் கட்சியின் பொதுச் செயலாளர் பாலித ரங்கே பண்டாரவின் அறிவிப்பால், கட்சியின் தேர்தல் பரப்புரை நடவடிக்கைக்கு பெரும் பாதிப்பு ஏற்பட்டுள்ளது என்று கட்சியின் உறுப்பினர்கள் சிலர் கட்சித் தலைவரான ரணில் விக்கிரமசிங்கவிடம் சுட்டிக்காட்டியுள்ளனர்.

எனவே, தேர்தல்கள் முடிவடையும்வரை ஊடக சந்திப்புகளை வைப்பதற்கு அவருக்கு அனுமதி வழங்கவேண்டாம் எனவும் அவர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (ம-44)

*17ஆம் திகதியன்று*

# பெரமுனவின் வேட்பாளர்: பஸில் விசேட அறிவிப்பு

கொழும்பு, ஜூன் 1


பொதுஜன பெரமுனக் கட்சியின் ஸ்தாபகரும், முன்னாள் ஜனாதிபதியுமான மஹிந்த ராஜபக்ச எதிர்வரும் 17ஆம் திகதி பெரமுனவின் ஜனாதிபதி வேட்பாளர் தொடர்பில் விசேட அறிவிப்பொன்றை விடுக்கவுள்ளார் என நம்பகரமான அரசியல் வட்டாரங்களில் இருந்து அறியமுடிகின்றது. (ம-44)

# ஐ.தே.க. செயற்குழு நாளை கூடுகின்றது!

கொழும்பு, ஜூன் 1

ஐக்கிய தேசியக் கட்சியின் மத்திய செயற்குழுக் கூட்டம் நாளை கட்சியின் தலைமையகமான ஸ்ரீகொத்தவில் நடைபெறவுள்ளது.

கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க தலைமையில் நடைபெறவுள்ள இந்தக் கூட்டத்தில் கட்டாயம் பங்கேற்குமாறு செயற்குழு உறுப்பினர்களுக்குத் தெரியப்படுத்தப்பட்டுள்ளது. (ம-44)



# விரைவில் கட்சித்தாவல்

கொழும்பு, ஜூன் 1

தெற்கு அரசியலில் இன்னும் ஓரிருநாள்களில் கட்சி தாவலொன்று இடம்பெறவுள்ளது எனத் தெரியவருகின்றது.

நாடாளுமன்றம் எதிர்வரும் 4ஆம் திகதி கூடவுள்ளது. இதன்போது எதிரணி உறுப்பினர்கள் மூவர் ஜனாதிபதிக்கு ஆதரவு தெரிவித்து, ஆளுங்கட்சியுடன் இணைவார்கள் என அறியமுடிகின்றது.

இதற்கான பேச்சுகள் வெற்றியளித்துள்ளது எனவும், 4ஆம் திகதி கட்சித் தாவல் உறுதியெனவும் ஐ.தே.க. உறுப்பினர் ஒருவர் தெரிவித்துள்ளார். (ம-44)

## நாளை

02.06.2024
ஞாயிற்றுக்கிழமை
வைகாசி - 20
சுபநேரம் : 08.52 - 10.22
ராகுகாலம் : 04.22 - 05.52

ஏகாதசி விரதம்

## நாளொரு நல்வார்த்தை

ஒருமுறை செய்த தவறை இரண்டாவது முறையாகசெய்யாமலிருப்பதே வெற்றி.

- ஜோர்ஜ் பெர்னாட் ஷா -

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொகுப்பு : தங்க முகுந்தன்



# தீ விழுங்கிய தமிழமுதம்!

யாழ்ப்பாணப் பொதுநூலகம் பேரினவாதப் பூதங்களால் தீக்கிரையாக்கப்பட்டு இன்றுடன் 43 ஆண்டுகள் ஓடிமறைகின்றன. யாழ்ப்பாணம் பொலிஸ் நிலையத்திலிருந்து சில மீற்றர்கள் தூரத்தில் இருந்த நூலகத்தின் மீது 1981ஆம் ஆண்டு ஜூன் முதலாம் திகதி நடத்தப்பட்ட இந்த கடைநிலைத் தாக்குதல் தமிழர்களின் மனங்களில் இடியாய் இறங்கியது. இன்றளவும் அது ஆறாத ரணமாகத்தாக் இருக்கின்றது. யாழ். நூலகம் என்பது அப்போது வெறும் கட்டடமாக மக்களிடம் நிலைபெற்றிருக்கவில்லை. யாழ்ப்பாணத்து மக்களின் ஆன்மாவாக அது அடையாளப்படுத்தப்பட்டிருந்தது. தங்கள் பிள்ளைகளின் அறிவுப்புலமாக விளங்கிய யாழ். நூலகத்துக்கு நன்றி செலுத்தும் வகையில் பல குடும்பங்கள், நூலக முன்புறத்தில் இருந்த சரஸ்வதி சிலைக்கு பொங்கலிட்டு படையல் செய்த சம்பவங்களும் நிகழ்ந்திருந்தன.

ஓர் இனத்தை அழிக்கவேண்டுமாயின் முதலில் அந்த இனத்தின் அறிவை அழிக்கவேண்டும். எனவே தமிழர்களின் அறிவுக்கருவூலமாக 1800ஆம் ஆண்டுகளில் எழுதப்பட்ட ஓலைச் சுவடிகள், வரலாற்றுச் சான்றுகள் உள்ளிட்ட 97 ஆயிரத்துக்கும் மேற்பட்ட விலை மதிக்க முடியாத நூல்களோடு, தெற்காசியாவில் சிறந்த நூலகமாக விளங்கிய யாழ். பொது நூலகத்தை எரிப்பதனூடாக தமிழர்களின் ஆன்மாவை நிலைகுலைய வைக்கலாம் என பேரினவாதிகள் கருதினர். அதனால் அவர்களின் கண்ணை உறுத்திக் கொண்டிருந்த நூலகத்துக்கு பேரின வானரங்கள் ஜூன் முதலாம் திகதி தீயிட்டன. ஜூன் 2ஆம் திகதிவரை நூலகம், மக்களின் கண்முன்னே எரிந்து சாம்பரானது. நூலகம் எரிவதை யாழ்ப்பாணம் சென்.பற்றிக்ஸ் கல்லூரியின் மத்தியூஸ் அரங்கிலிருந்து பார்த்த தாவீது அடிகள் மாரடைப்பால் காலமானார்.

நூலகம் எரிக்கப்பட்ட அதே இரவில், ஈழநாடு பத்திரிகையும் எரிக்கப்பட்டது. ஒரேயொரு குடாநாட்டுப் பத்திரிகை எரிக்கப்பட்டதன்பின் செய்திகள் எதுவும் குடாநாட்டிலிருந்து வெளிவரவில்லை. செய்திகள் கொழும்புக்கும், வெளிநாடுகளுக்கும் சென்று சேர்ந்த பின்னரே யாழ்ப்பாணத்தின் தொலைவுப் பகுதிகளில் இருந்தவர்களுக்கும், வடக்கில் ஏனைய மாவட்டங்களில் இருந்தவர்களுக்கும் விடயம் தெரியவந்தது. அகில இந்திய வானொலி, வெரித்தாஸ், பிபிசி இவை வழங்கிய செய்திகளே மறுநாளில் தமிழ் மக்கள் செய்தியறிவதன் முதல் மூலங்களாகின.

**நூலக எரிப்பின் பின்னரான தொடர்ச்சியான சேதங்கள்!**

1981ஆம் ஆண்டு ஜூன் முதலாம் திகதி பின்னிரவு நூலகம் எரிக்கப்பட்ட பின்னர், மூன்று தடவைகள் அது பெரும் சேதங்களுக்கு உட்படுத்தப்பட்டிருக்கின்றது.

1985ஆம் ஆண்டு மே மாதம் 9, 10, 11ஆம் திகதிகளில் மூன்று சம்பவங்கள் இடம்பெற்றதாகத் தெரியவருகின்றது. சோமீதரனின் எரியும் நினைவுகள் ஆவணப்படத்தில், முன்னைய நூலகர் சுலோச்சனா ரகுநாதன் கருத்துத் தெரிவிக்கையில் 1985ஆம் ஆண்டு மே மாதம் 9ஆம் திகதி ரொக்கெட் லோஞ்சருடன் வந்த இளைஞர் ஒருவரால் கோட்டை தாக்கப்பட்டதைத் தொடர்ந்து, இராணுவத்தினர் பதில் தாக்குதல் நடத்தினார்கள் எனவும். அன்று இரவு நூலகப் பகுதிகளில் பெரியளவில் குண்டுச் சத்தங்கள் கேட்டதாகவும் தெரிவிக்கின்றார்.

அத்துடன், 1985ஆம் ஆண்டு மே மாதம் 10ஆம் திகதி யாழ்ப்பாணம் பொதுநூலகத்துக்கு அரச படையினர் குண்டு வைத்தனர் என்று அக்காலத்தில் ஆணையாளராக இருந்த சி.வீ.கே.சிவஞானம் 2010ஆம் ஆண்டு ஜூலையில் வெளியிட்ட அறிக்கையொன்றில் குறிப்பிட்டுள்ளார்.

1986ஆம் ஆண்டு ஓகஸ்ட் மாதம் 24ஆம் திகதி கோட்டையில் இருந்து ஏவப்பட்ட ஷெல் தாக்குதல்களால் நூலகக் கட்டடத்தில் பெரிய சேதம் ஏற்பட்டிருந்தது என்று மறுநாள் வெளியான ஈழமுரசில் செய்தி வெளியாகியிருந்தது. 1987ஆம் ஆண்டு மே மாதம் 15ஆம் திகதி நூலகம் பகுதியளவில் எரிக்கப்பட்டதாக 1987ஆம் ஆண்டு மே மாதம் 17ஆம் திகதி வெளியான முரசொலி பத்திரிகை செய்தி வெளியிட்டிருந்தது.

**யாழ். நூலகத்தை பங்குபோட்ட மதவாதம்**

அரசியல் மாத்திரமல்ல சமயமும் நூலக வரலாற்றில் ஆதிக்கம் செலுத்தியிருக்கிறது என்பதை சரஸ்வதி சிலையொன்றை மையப்படுத்தி முன்னெழுப்பப்பட்ட பிரச்சினையொன்று தெளிவாகச் சொல்லுகின்றது. நூலகத்தில் சரஸ்வதி சிலையொன்றே வைக்கப்பட்டிருந்ததாகவும், பின்னர் அது பெயர்த்தெறியப்பட்டதாகவும், அதன் பின்னர் யாழ் நங்கை சிலை அதில் வைக்கப்பட்டதாகவும், பின்னர் யாழ் நங்கையின் சிலை அகற்றப்பட்டு சரஸ்வதி சிலை வைக்கப்பட்டதாகவும், யாழ்ப்பாணப் பொது நூலகம் ஒரு வரலாற்றுத் தொகுப்பு என்ற என்.செல்வராஜாவின் தொகுப்பு நூலில், கலாநிதி வே.இ.பாக்கியநாதன் எழுதிய 'நூலகர் நெஞ்சை விட்டகலா நினைவலைகள்' என்ற கட்டுரை இயம்புகின்றது.

பொது நூலகம் எரிக்கப்பட்டபோதும், அதன்பின் யுத்தத்தினால் ஏற்பட்ட சேதங்களின் பின்பும், கிழக்கு வாசல் முன்புறத்தில் பதிக்கப்பட்டிருந்த அனைத்து வெள்ளைக் கற்களும் அகற்றப்பட்டு புதிய கறுப்புக் கற்களாக மாற்றப்பட்டன. நூலகம் எரிக்கப்பட்டதற்கான எந்தவித மான ஆதாரங்களையும் இல்லாமல் செய்வதும் இதற்கு ஒருகாரணமாக இருக்கலாம்.

1954ஆம் ஆண்டில் ஐவரால் அடிக்கல் நாட்டப்பட்ட நினைவுக்கற்களில் ஒன்று வாசலில் இருந்தது. கட்டடத்திற்கு வெளியே 4 நினைவுக்கற்கள் இன்றும் யுத்தவடுக்களோடு காணப்பட்டாலும் வண. பிதா. லோங்கின் நினைவுக்கல் மாற்றப்பட்டுள்ளது. அவரது சிலையிலிருந்தசேதமடைந்த பழையகல்லும் புதிதாக மாற்றப்பட்டிருக்கிறது.

நூலகத்தின் சரித்திரத்தில் அத்திபாரமிடப்பட்டபோதும் சரி, திறந்து வைக்கப்பட்டபோதும் சரி, அனைத்து நினைவுக் கற்களும் ஆங்கிலத்திலேயே இருந்திருக்கின்றன. 1981ஆம் ஆண்டு நூலகம் எரிக்கப்பட்ட பின் கட்டப்பட்ட பின்புறப்பகுதியின் வாசலில் தமிழிலும் ஆங்கிலத்திலும் இரண்டு கற்கள் பதிக்கப்பட்டன. ஒன்று 1982ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் 7ஆம் திகதியன்று அடிக்கல் நாட்டியது, மற்றையது 1984ஆம் ஆண்டு ஜூன் மாதம் 4ஆம் திகதியன்று திறக்கப்பட்டமை பற்றியவை.

**அழிந்தது அழிந்ததே!**

மீண்டும் புதிதாக யாழ்.பொது நூலகம் அமைக்கப்பட்டபோதும் கூட, அதன் முன்னைய ஆன்மா இன்னும் அதனிடத்தே இல்லையென்றுதான் சொல்லவேண்டும். அழிந்த நூலகம் அழிந்ததுதான். அது வேறு ஆன்மா, இப்போதைய நூலகத்தின் ஆன்மா வேறு. ஏனெனில் வெறும் கட்டடம் தான் அதேபோன்று முன்னரை விடவும் கூடுதல் வசதிகளோடு அமைக்கப்பட்டதே தவிர அதனோடு எரிந்து போன அரிய நூல்களோ, சுவடிகளோ மீண்டெழ முடியாதே? அவை இல்லாமல் எப்படி நூலகத்தின் ஆன்மா திரும்பமுடியும்?

அதனால்தான், இந்த இழிசெயலை சிந்தனையற்ற காடைத்தனத்தை இவ்வாறு பதிவுசெய்கின்றார் கவிஞர் எம்.ஏ.நுஃமான்.

'நேற்று என் கனவில்
புத்தர் பெருமான் சுடப்பட்டிறந்தார்.
சிவில் உடை அணிந்த
அரச காவலர்கள் அவரைக் கொன்றனர்.
யாழ் நூலகத்தின் படிக்கட்டருகே
அவரது சடலம் குருதியில் கிடந்தது.
இரவில் இருளில்
அமைச்சர்கள் வந்தனர்.
'எங்கள் பட்டியலில் இவர்பெயர் இல்லை
பின் ஏன் கொன்றீர்?'
என்று சினந்தனர்.
'இல்லை ஐயா,
தவறுகள் எதுவும் நிகழவே இல்லை
இவரைச் சுடாமல்
ஓர் ஈயினைக் கூடச்
சுடமுடியாது போயிற்று எம்மால்
ஆகையினால்......
என்றனர் அவர்கள்.
'சரி சரி
உடனே மறையுங்கள் பிணத்தை'
என்று கூறி அமைச்சர்கள் மறைந்தனர்.
சிவில் உடையாளர்
பிணத்தை உள்ளே இழுத்துச் சென்றனர்.
தொண்ணூறாயிரம் புத்தகங்களினால்
புத்தரின் மேனியை மூடி மறைத்தனர்
சிகாலோவாத சூத்திரத்தினைக்
கொளுத்தி எரித்தனர்.
புத்தரின் சடலம் அஸ்தியானது
தம்ம பதமும்தான் சாம்பரானது'

என்றவாறாகப் பதிவுசெய்கின்றார்.

**ஆவணத் தொகுப்புகள்**

யாழ்ப்பாண நூலகம் பற்றி வெளிவந்த நூல்களாக

1. எழில்மிகு யாழ்ப்பாணம் சுகாதார வாரமலர் 1968
2. யாழ்ப்பாண மாநகர சபை வெள்ளிவிழா மலர் 1974
3. மீண்டும் யாழ்ப்பாணம் எரிகிறது 1981
4. யாழ்ப்பாண பொது நூலகம் மீள்விக்கப்பெற்ற கட்டத் திறப்புவிழா மலர் 1984
5. யாழ் மாநகர சபை பொன் விழா மலர் 2002
6. யாழ்ப்பாண நூல்நிலையம் ஓர் ஆவணம் மூதறிஞர் க.சி.
7. யாழ்ப்பாணப் பொது நூலகம் ஒரு வரலாற்றுத் தொகுப்பு என்.செல்வராஜா
8. யாழ்ப்பாண நூலகம் அதன் சாம்பலிலிருந்து எழுகின்றது வி.எஸ். துரைராஜா
9. ஒரு வரலாற்றுக் குற்றம்
10. யாழ்ப்பாண நூலகம் பற்றிய கவிதைத் தொகுப்பு என்.செல்வராஜா - என்பவை இன்றளவும் அறியப்படுகின்றன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அலைகடல் அசைந்தாடும் பாஷைநகரில் புதுமைப் புனிதன் கோவில் கொண்டான்

யாழ்ப்பாணம், பாஷையூர் புனித அந்தோனியார் ஆலயத்தின் கொடியேற்றம் இன்றாகும். அதனை முன்னிட்டு இந்தக் கட்டுரை பிரசுரமாகின்றது.



## இன்றைய (ராசிபலன்)

**மேடம்:** காரிய அனுகூலமான நாள். புதிய முயற்சிகளை மேற்கொள்வதற்கு உகந்த நாள். தேவையான பணம் கையில் இருப்பதால் செலவுகளைச் சமாளிப்பதில் சிரமம் எதுவும் இருக்காது. உறவினர்களால் குடும்பத்தில் சில சங்கடங்கள் ஏற்படக்கூடும்.
நண்பர்களின் சந்திப்பு மகிழ்ச்சி தரும். வியாபாரத்தில்

**இடபம்:** புதிய முயற்சிகளில் ஈடுபடவேண்டாம். வழக்கமான பணிகளில் மட்டுமே கவனம் செலுத்தவும். சிலருக்கு மனதில் இனம் தெரியாத சோர்வு உண்டாகலாம். அக்கம்பக்கத்தில் இருப்பவர்களுடன் இணக்கமாக நடந்துகொள்ளவும்.

**மிதுனம்:** எதிர்பார்த்த பணவரவு கிடைக்கும். சிலருக்குப் பிள்ளைகள் மூலமும் பண வரவுக்கு வாய்ப்பு உண்டு. வாழ்க்கைத்துணையால் செலவுகள் ஏற்படும். மற்றவர்களுடன் வீண் விவாதம் செய்வதைத் தவிர்ப்பது நல்லது.

**கடகம்:** தந்தைவழி உறவுகளால் சங்கடம் ஏற்படக்கூடும். தந்தையின் உடல் ஆரோக்கியத்தில் கவனம் தேவை. சகோதரர்களால் சில பிரச்சினைகள் ஏற்படக்கூடும். வாழ்க்கைத் துணையின் தேவைகளை நிறைவேற்றுவீர்கள்.

**சிம்மம்:** அதிர்ஷ்டகரமான நாள். இன்று நீங்கள் எடுக்கும் புதிய முயற்சி வெற்றிகரமாக நிறைவேறும். தொடங்கிய காரியங்கள் அனுகூலமாக முடியும். உங்களுடைய முயற்சிக்கு வாழ்க்கைத்துணை பக்கபலமாக இருப்பார்.

**கன்னி:** காலைமுதலே சுறுசுறுப்பாகச் செயல்படுவீர்கள். எதிர்பாராத செலவுகள் ஏற்பட்டாலும் தேவையான பணம் இருப்பதால் சமாளித்துவிடுவீர்கள். எதிரிகள் வகையில் எச்சரிக்கையாக இருக்கவும்.

**துலாம்:** உற்சாகமான நாள். கணவன் மனைவிக்கிடையே அந்நியோன்யம் அதிகரிக்கும்.வாழ்க்கைத் துணையின் விருப்பத்தை நிறைவேற்றுவீர்கள். முக்கியமான முடிவுகள் எதையும் இன்று எடுக்க வேண்டாம்.

**விருச்சிகம்** : எதிர்பாராத பணவரவுடன், திடீர்ச் செலவுகளும் ஏற்படும். நண்பர்களிடம் எதிர்பார்த்த உதவி கிடைக்கும். மாலையில் குடும்பத்துடன் உற்சாகமாகப் பேசி மகிழ்வீர்கள். எதிரிகள் பணிந்து போவார்கள்.

**தனுசு:** புதிய முயற்சிகளில் ஈடுபடவேண்டாம். சகோதர வகையில் எதிர்பார்க்கும் காரியம் முடிவதில் தாமதம் உண்டாகும். வாழ்க்கைத்துணையால் சில சங்கடங்கள் ஏற்பட்டு மனச்சஞ்சலத்தை ஏற்படுத்தும். பொறுமை மிக அவசியம்.

**மகரம்:** புதிய முயற்சிகளை பிற்பகலுக்குமேல் தொடங்குவது சாதகமாக முடியும். தாயின் உடல் நலனில் கவனம் தேவை. உறவினர்களுடன் பேசும்போது வீண் மனவருத்தம் ஏற்பட வாய்ப்பு உள்ளதால் பொறுமையைக் கடைப்பிடிக்கவும்.

**கும்பம்:** பொறுமையுடன் இருக்கவேண்டிய நாள். எதிர்பாராத செலவுகளால் கடன் வாங்க நேரிடும். அக்கம் பக்கத்தில் இருப்பவர்களுடன் அனுசரணையாக நடந்துகொள்வது மிக அவசியம். வாகனத்தில் செல்லும்போது கவனமாக இருக்கவும்.

**மீனம்:** கணவன் மனைவிக்கிடையே இருந்த கருத்துவேற்றுமை நீங்கி, அந்நியோன்யம் அதிகரிக்கும். மனதில் தைரியமும் தன்னம்பிக்கையும் அதிகரிக்கும். காரியங்களில் வெற்றி உண்டாகும். புதிய முயற்சிகளை பிற்பகலுக்கு மேல் தொடங்குவது நல்லது.

**கொ.றொஷ்வின்**
பாஷையூர்

யாழ். குடாநாட்டின் கரையோரப் பகுதியில் அமைந்துள்ள 62.29 ஏக்கர் விஸ்தீரணத்தைக்கொண்ட புகழும் புதுமையும்மிக்க புனித அந்தோனியார் ஆலயத்தைக் கொண்டு அமையப்பெற்ற கிராமமே பாஷையூராகும்.

கி.பி. 3ஆம் நூற்றாண்டில் மாந்தை பிரசித்திபெற்ற இறங்குதுறையாக விளங்கியதால் கொழும்பு செல்லும் பயணிகளுக்கான சிறிய துறைமுகமாக கொழும்புத்துறை விளங்கியது. கொழும்பு செல்வதற்கான அனுமதிப்பத்திரங்கள் பெறுவதற்கான இடமாக பாஷையூர் விளங்கியதால் பாசூர் என்று பெயர் ஏற்பட்டதாக மக்கள் மத்தியில் ஒரு கதை உண்டு. மேலும் யாழ்பாடி என்னும் ஒருவன் பரராசசிங்கன் அரசசபையில் தனது திறமையை வெளிப்படுத்தியதால் அரசன் கொடுத்த மணல்மேடுதான் தற்போது பாஷையூர் என்றும் செவிவழிக் கதைகள் உள்ளன.

எனினும் ஒல்லாந்தர் ஆட்சிக்காலத்தில் பாஷையூரில் கிறிஸ்தவர்கள் வாழ்ந்தார்கள் என்பது பற்றி 1775ஆம் ஆண்டு ஆயர் இல்ல அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. கத்தோலிக்க மதத்தைத் தழுவியிருந்த போர்த்துக்கேயர் செபவழிபாடுகளை நடத்த ஒரு சிறு குடிலை பாஷையூரில் அப்போது அமைத்தனர் என்றும் அங்கே ஒரு அந்தோனியார் திருச்சொரூபம் எழுந்தருளியது என்றும் தெரிவிக்கப்படுகிறது. இதைத் தொடர்ந்து பாஷையூர் அந்தோனியார் ஆலயம் கண்டுவந்த வளர்ச்சி மிகப்பெரியதாகும்.

1814ஆம் ஆண்டுகளில் இந்தியாவின் கோவா மாநிலத்திலிருந்து ஒறிற்றோரியன் சபையைச் சேர்ந்த அருட்தந்தை யோக்கிம் கபிரியேல் என்னும் குருவானவரின் முயற்சியால் முருங்கற்கல்லிலான ஓர் ஆலயம் அமைக்கப்பட்டது. அதன்பின்னர் வந்த குருவானவரான விக்ரர் டெலாண்டெஸின் முயற்சியால் 106 அடிநீளமும் 38 அடி அகலம் கொண்ட ஆலயம் 20 ஆயிரம் ரூபா செலவில் 1911ஆம் ஆண்டு ஒக்ரோபர் மாதம் 13ஆம் திகதி உரோம் கலைநுட்பங்களுக்கு ஏற்ப அமைக்கப்பட்டது.

அருட்தந்தை யோக்கிம் கபிரியேலுக்கு நன்றி தெரிவிக்கும் முகமாக, அவர் இறந்த பின்பு அவரது உடல் ஆலயத்தின் மேற்குப் பக்கமாகவுள்ள கோவில் பகுதியில் அடக்கம் செய்யப்பட்டுள்ளது. அத்துடன் அந்தக் குருவானவரின் நினைவாக பாஷையூர் கடற்கரை வீதியில் அவருக்கு உருவச்சிலையும் அமைக்கப்பட்டுள்ளது. 1935ஆம் ஆண்டு அப்போது பங்குத்தந்தையாகவும் பின்னர் ஆயராகவும் இருந்த மறைந்த ஆயர் எமிலியானுஸ்பிள்ளை ஆண்டகையின் முயற்சியால் இரண்டு கோபுரங்கள் உயர்த்தப்பட்டன.

ஆலயத்தின் நடுவே காணப்படும் சிம்மாசனமானது வண்ணார்பண்ணையைச் சேர்ந்த சரவணமுத்து என்னும் சிற்பக் கலைஞரால் வடிமைக்கப்பட்டது. 1950ஆம் ஆண்டுமுதல் இன்றுவரை பயன்படுத்தப்படும் சிங்காரத் தேரும் அவராலே செதுக்கப்பட்டது. ஆசந்தி, அந்தோனியார் மற்றும் செபஸ்தியார் எழுந்தருளியிருக்கும் இருப்பிடமும் அவராலே செய்யப்பட்டது. சிம்மாசனத்தில் நடுவே காணப்படும் அந்தோனியாரின் உயர்ந்த திருச்சொரூபம் உரோமிலிருந்து எடுத்துவரப்பட்டு, ஆலயத்தில் திருப்பொழிவு செய்யப்பட்டது. ஆலயத்தில் காணப்படும் சிலுவைப்பாதை படங்கள் அனைத்தும் 1918ஆம் ஆண்டளவில் பெல்ஜியம் நாட்டிலிருந்து கொண்டுவரப்பட்டவையாகும். அத்துடன், கொச்சிக்கடை புனித அந்தோனியார் ஆலயத்தின் ஆண்டுவிழாவை முன்னிட்டு இத்தாலியில் இருந்து எடுத்துவரப்பட்ட அந்தோனியாரின் திருப்பண்டம் பாஷையூர் அந்தோனியார் ஆலயத்துக்குக் கொண்டுவரப்பட்டமையும் ஒரு வரப்பிரசாதமே.

1996ஆம் ஆண்டு ஏற்பட்ட உள்நாட்டுப் போரின் போது, ஆலயத்தின் கூரைகள் சேதமடைந்தபோதும், அந்தோனியாரின் இருப்பிடங்கள் சேதமாக்கப்பட்ட போதும் அந்தோனியாரின் திருச்சொரூபம் எவ்வித சேதமும் ஏற்படாமல் அப்படியே காணப்பட்டதுடன், அவரின் சிங்காரத் தேருக்கும் பாதிப்பு ஏற்படவில்லை. இப்படிப்பட்ட வரலாற்றுப் பிரசித்தி பெற்றதும், அற்புதங்கள் நிறைந்ததுமான அந்தோனியார் ஆலயத்தின் வருடாந்தத் திருவிழாவுக்கான கொடியேற்றம் இன்று மாலை 5 மணிக்கு திருச்செபமாலையுடன் ஆரம்பமாகின்றது.

2ஆம் திகதி சென்.அன்ரனீஸ் வீதி சந்தியிலுள்ள வரவேற்பு அந்தோனியார் கெபியில் வழிபாடுகள் இடம்பெறும். 3ஆம் திகதி கடல் நடுவே எழுந்தருளியிருக்கும் புனித அந்தோனியாரின் கெபியில் வழிபாடுகள் இடம்பெறும். 4ஆம் திகதி வழமைபோன்று ஆலயத்தின் மாடத்தில் நவநாள் திருப்பலிகள் திருச்செபமாலையுடன் ஆரம்பமாகும். எதிர்வரும் 12ஆம் திகதி மாலை நற்கருணை பெருவிழாவும், மறுநாள் 13ஆம் திகதி காலை பெருவிழா திருப்பலியும் இடம்பெற்று, மாலை புனிதரின் திருத்தேர்ப் பவனி ஆலயத்திலிருந்து ஆரம்பமாகி கிராமங்கள் ஊடாக வலம்வந்து, மீண்டும் ஆலயத்தை வந்தடைந்து திருச்சொரூப ஆசிருடன் பெருவிழா நிறைவுபெறும்.



இணுவில் ஸ்ரீ பரராஜசேகரப் பிள்ளையார் ஆலய வருடாந்த மஹோற்சவம், நேற்று முன்தினம் வியாழக்கிழமை நண்பகல் 12 மணியளவில் கொடியேற்றத்துடன் ஆரம்பமானது. தொடர்ந்து பதினொரு தினங்கள் ஆலய மஹோற்சவம் இடம்பெறுமென ஆலய பரிபாலன சபையினர் தெரிவித்துள்ளனர். (ப-66)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வருகிறார் மஸ்க்!




உலக செல்வந்தரான எலான் மஸ்க் விரைவில் இலங்கைக்கு வரவுள்ளார் என்றும், அதற்குரிய ஏற்பாடுகள் இடம்பெற்று வருகின்றன என்றும் ஜனாதிபதியின் செயலாளர் ஜனக ரத்நாயக்க தெரிவித்துள்ளார்.

எலான் மஸ்குக்குச் சொந்தமான, 'ஸ்டார் லிங்' இணையசேவை விரைவில் இலங்கையில் ஆரம்பமாகவுள்ளது. கொழும்புக்கு வெளியில் உள்ள இடங்களின் இணைய வலையமைப்பைக் கருத்திற்கொண்டு இந்தச் சேவை அறிமுகப்படுத்தப்படவுள்ளது. இந்த நிகழ்வில், எலான் மஸ்க் கலந்துகொள்வாரா என்பது சந்தேகத்துக்குரியதாகவே இருந்த நிலையில், அவர் கலந்துகொள்வார் என்பதை ஜனாதிபதியின் செயலாளர் ஜனக ரத்நாயக்க உறுதிப்படுத்தியுள்ளார்.

இணைய சேவை ஆரம்பிக்கப்படும் தினத்தன்று எலான் மஸ்க்கின் விண்வெளி ஆய்வு நிறுவனமான ஸ்பேஸ் எக்ஸில் உள்ளவர்களுடன் உரையாடுவதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளதாகவும் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம-6)

# யாழ்ப்பாணத்தில் டெங்கு அபாயம்

## வடமராட்சியில் தடுப்பு நடவடிக்கை



யாழ்ப்பாணம், ஜூன் 1

**யாழ். மாவட்டத்தில் ஏழு பொதுச்சுகாதார மருத்துவ அதிகாரி பிரிவுகளில், டெங்கு நோயின் தாக்கம் உள்ளதாக அடையாளம் காணப்பட்டுள்ள நிலையில், வடமராட்சிப் பகுதிகளில் தடுப்பு நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.**

யாழ்ப்பாணம் மாவட்டத்தில் கடந்த சில தினங்களாக கனமழை பெய்துள்ள நிலையில், தேசிய ரீதியில் டெங்குத் தொற்று அபாயம் உள்ள மாவட்டங்களில் ஒன்றாக யாழ்ப்பாணமும் அறிவிக்கப்பட்டுள்ளது.

இதையடுத்தே பரவலாக டெங்குத் தடுப்பு நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

வடமராட்சிப் பிரதேசத்துக்குட்பட்ட பருத்தித்துறை, கரவெட்டி பொதுச் சுகாதார மருத்துவ அதிகாரி பிரிவுகளில் நேற்றுமுன்தினம் வியாழக்கிழமை டெங்கு ஒழிப்பு நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டன.

அத்துடன் தென்மராட்சிப் பகுதியிலும் டெங்குத் தடுப்பு நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு பல குடியிருப்புகளுக்கு சிவப்பு அறிவித்தல் வழங்கப்பட்டுள்ளது. இந்த நடவடிக்கைகள் மேலும் சில தினங்களுக்குத் தொடரும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(ம-ப-ச-100-17-9-159)

# மரம் நடுகை



வடலியடைப்பு இளைஞர்களால் 150 மரங்கள் நடும் திட்டத்தின் முதற்கட்டமாக 50 மரக்கன்றுகள் சித்தங்கேணி பண்டத்தரிப்பு பிரதான வீதியில் கடந்த ஞாயிற்றுக்கிழமை நடுகை செய்யப்பட்டுள்ளன. கீறின் லேயர் அமைப்பு இந்த மரக்கன்றுகளை இலவசமாக வழங்கியுள்ளது. (ஒ-இ)

# கசிப்புடன் கைது

யாழ்ப்பாணம், ஜூன் 1

சுழிபுரத்தில் கசிப்புடன் ஒருவரை வட்டுக்கோட்டை பொலிஸார் கடந்த செவ்வாய்க்கிழமை கைது செய்துள்ளனர் எனத் தெரிவிக்கப்பட்டது.

71வயதான சந்தேகநபரிடமே 750 மில்லிலீற்றர் கசிப்பைப் பொலிஸார்மீட்டுள்ளனர். (ஒ-125)

## விற்பனைக்கு

நிலை, கதவு, இரும்பு கேட்(S), ஓடு, கட்டட இடிபாடுகள் விற்பனைக்குண்டு.

தொடர்பு: 0777 232535

## விற்பனைக்கு

லுமாலா ஆண்களுக்கான துவிச்சக்கர வண்டி, Hero Honda Pleasure மோட்டார் சைக்கிள் மற்றும் Gas Slinder (blue) ஆகியவை விற்பனைக்குண்டு.

தொடர்புகளுக்கு: 076 075 1357

## வீட்டுடன் காணி விற்பனைக்கு

பருத்தித்துறை தம்பசிட்டியில் 1 1/4 பரப்புக் காணியில் நவீன முறையில் திருத்தியமைக்கப்பட்ட 4 அறைகளைக் கொண்ட வீடு வெட்டுக்கிணறுடன் விற்பனைக்குண்டு.

தொடர்பு: + 4799 043150

(CS/ 55204) N-1

# ஆதனப்பெயர்மாற்றம்

யாழ்ப்பாணம் மாநகரசபைக்குட்பட்ட வட்டாரம் - 13 அபூபக்கர் வீதி. ஆதன இல. 160. என்னும் வரிமதிப்பீட்டு இலக்கத்தைக் கொண்ட ஆதனம் எம்.எஸ். மொகமட் சுல்தான் மற்றும் ஆயிஷாஉம்மா என ஆதனப்பதிவேட்டில் பதியப்பட்டுள்ளது.

குறித்த ஆதனம் யாழ்ப்பாணம். வண்ணார்பண்ணை மேற்கு இறையில் அசானாலெப்பை சித்தி அசீமா அவர்கள் 15.12.2014ம் திகதியிட்டு பிரசித்த நொத்தாரிசு எம் எஸ் பலீல் முகதாவில் 1351 ம் இலக்கத்தில் நிறைவேற்றப்பட்ட வெளிப்படுத்தல் உறுதி மூலம் 1990 ம் ஆண்டு காலப்பகுதியில் இடப்பெயர்வின்போது சகல ஆவணங்களும் தொலைந்து விட்டதாகவும். காணிப்பதிவகத்தில் பெற்றுக்கொள்ள முடியவில்லை எனவும் வெளிப்படுத்தியுள்ளார்.

குறித்த ஆதனத்தை அசானாலெப்பை சித்தி அசீமா 22.11.2022 ம் திகதியிட்டு பிரசித்த நொத்தாரிசு ஜெயச்சித்திரா சிறிதரன் முகதாவில் 4187ம் இலக்க அறுதி உறுதி மூலம் ரஜப் அஸ்கர் என்பவருக்கு வழங்கியுள்ளார்.

குறித்த ஆதனத்தை ரஜப் அஸ்கர் 04.05.2022 ம் திகதியிட்டு பிரசித்த நொத்தாரிசு ஜெயச்சித்திரா சிறிதரன் முகதாவில் 4732ம் இலக்க அறுதி உறுதி மூலம் யோகராசா இராஜரூபன் மற்றும் மனைவி யமீரா என்பவருக்கு வழங்கியுள்ளார்.

### ஆதன அட்டவணை

வடமாகாணம். யாழ்ப்பாண மாவட்டம். யாழ்ப்பாணப்பகுதி வண்ணார்பண்ணை கோவிற்பற்று வண்ணார்பண்ணை மேற்கு இறை யாழ்ப்பாணம் பிரதேச செயலக பிரிவு யாழ் மாநகரசபை எல்லைக்குட்பட்ட J/ 86ம் இலக்க கிராம அலுவலர் பிரிவில் "தாழ்வுப்புலம்" நிலப்பரப்பு O குளி 8.3 உத்தரவு பெற்ற நில அளவையாளர் கே. கனகசபை அவர்களால் 18.12.2023ம் திகதி அளந்து விபரித்த 5702A/13 இலக்க படத்தின்படி நிலப்பரப்பு லொட் 1 எனக்காட்டப்பட்டுள்ளது. இது உத்தரவு பெற்ற நிலஅளவையாளர் எஸ்.பத்மகாந்தன் அவர்களால் 17.10.2020 ம் திகதி 85 ம் இலக்கத்தில் அளந்த நில அளவைப்படத்தில் கெலாட் 1. லொட் 2. லொட் 3 எனக்காட்டப்பட்டதன் படி நிலப்பரப்பு 0 குளி 7.77 இதில் லொட் 1 எனக்காட்டப்பட்ட நிலப்பரப்பு பூச்சியம் குளி ஐந்து தசம் ஏழு நான்கு (நில பரO குளி 5.74) கட்டடமும் அரைவாசிக் கிணறும்.

**இதற்கு எல்லைகள்**

| | |
|---|---|
| கிழக்கு | : முன்னுறுதிப்படி சாகுல் கமீட் பெண் ஆயிஷாஉம்மாவின் ஆதனம் |
| வடக்கு | : காதி அபூபக்கர் வீதி |
| மேற்கு | : லொட் 2 என்ற பாதைக்காக விடப்பட்ட பாகம். |
| தெற்கு | : உத்தரவு பெற்ற நிலஅளவையாளர் கே.கனகசபையின் 5702A/13 இலக்க படத்தில் லொட் 2 என்ற பாகம் |


இதடங்கலும் இன்னும் லொட் 2 என்ற பாதைக்காக விடப்பட்ட பாகத்தால் போக்குவரத்து உரித்தும்.

தற்போது இவ்வாதனத்தைத் யோகராசா இராஜரூபன் மற்றும் மனைவி யமீரா என்பவர்கள் தமது பெயரிற்கு எமது பதிவேட்டில் பெயர்மாற்றம் செய்வதற்கு விண்ணப்பித்துள்ளனர். எனவே இவ்வாதனத்திற்கு உரிமைகோருபவர்கள் யாராவது இருப்பின் பத்திரிகையில் பிரசுரித்த திகதியில் இருந்து ஒருமாதத்திற்குள் உறுதிப்படுத்தப்பட்ட ஆவணங்களுடன் எழுத்து மூலம் அறியத்தருமாறும். உரிமைகோராவிடத்து குறித்த ஆதனமானது யோகராசா இராஜரூபன் மற்றும் மனைவி யமீரா என்பவர்கள் பெயரிற்கு மாற்றம் செய்ய நடவடிக்கை எடுக்கப்படும் என்பதுடன் இந்த ஆதனப்பெயர்மாற்றம் செய்வதால் வரக்கூடிய எப்பொறுப்பிற்கும் யாழ்ப்பாண மாநகரசபை பொறுப்பாளி அல்ல என்பதையும் அறியத்தருகின்றேன்.

**ஆணையாளர்,**
**மாநகர சபை. யாழ்ப்பாணம்.**

(cr.42535) (N-1)

# மரண அறிவித்தல்



சிவஸ்ரீ சோ.இ.பிரணதார்த்திஹர குருக்கள்

கோப்பாய் தெற்கு வீரபத்திரர் ஆலய பிரதம குருவும் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக பரமேஸ்வரன் ஆலய முன்னாள் பிரதம குருவும் வலிகிழக்கு சைவசமய அருள் நெறி மன்ற தலைவருமான சிவஸ்ரீ சோ.இ.பிரணதார்த்திஹர குருக்கள் நேற்றுமுன்தினம் (30.5.2024) வியாழக்கிழமை இரவு 8.30 மணியளவில் காலமானார்.

அவரது இறுதிக் கிரியைகள் நேற்று (31.05.2024) வெள்ளிக்கிழமை பகல் 2.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்றன.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளும்படி கேட்டுக்கொள்கின்றோம்.

வீரபத்திரர் கோவில்
கோப்பாய்

தகவல்:
**குடும்பத்தினர்.**

(CS 624) V-1

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இடர்பாதிப்பு கொடுப்பனவு

தென்மராட்சிப் பிரதேசத்தில் கடந்த வருடம் பெய்த பலத்த மழையால் பாதிக்கப்பட்ட 18 குடும்பங்களுக்கான முதல் கட்டக் கொடுப்பனவுகள், பிரதேச இடர்கால முகாமைத்துவ அலகினால் குடும்பங்களின் வங்கிக் கணக்குகளுக்கு அண்மையில் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன. அதேவேளை நாவற்குழி மேற்கில் வெள்ளத்தினால் பாதிக்கப்பட்ட 18 குடும்பங்களுக்கு தலா 10 ஆயிரம் ரூபா வீதம் முதல் கட்டக் கொடுப்பனவாக அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. (ஒ-25-9)

## வேலைக்கு ஆள்கள் தேவை

- இத்தாவில் (பளை) இல் அமைந்துள்ள பண்ணை ஒன்றில் தங்கியிருந்து வேலை செய்பவர்கள் தேவை. (குடும்பமாகவும் தங்கலாம்)
- பருத்தித்துறையில் உள்ள Luxury Hotel ஒன்றிற்கு House Keeping வேலையாள்கள் தேவை.
- தங்குமிட வசதியும், உணவும் இலவசம்.
- தகுந்த சம்பளம் பேசித் தீர்மானிக்கப்படும்.

(CS 2831) N-1 தொடர்பு: 076 326 3188

## வேலைவாய்ப்பு

யாழ். ஆஸ்பத்திரி வீதியில் இயங்கிவரும் பலசரக்கு வர்த்தக நிலையத்திற்கு பின்வரும் வேலையாட்கள் தேவை.

1. காசாளர் (Cashier)
   - ✓ (2 வருட அனுபவமுள்ளவர்கள்)
   - ✓ (அரச, அரச சார்பற்ற நிறுவனாங்களிலிருந்து ஓய்வு பெற்றவர்கள் விரும்பத்தக்கது.)
2. வாகனசாரதி (Driver)
3. Computer Billing. பொதி செய்து கொடுத்தல்.

யாழ். மாநகர சபை எல்லைக்குள் வசிப்பவர்கள் விரும்பத்தக்கது.

தொடர்புகளுக்கு:-T.P: 077 419 5015
021 221 2770

(CS 55228) A-1

## Chundikuli Girls' College, Old Girls' Association, Jaffna

### Annual General Meeting

Date : Saturday, 8th June, 2024
Venue : College hall

9.00 a.m. : Holy Communion & worship service at St. John the Baptist's Church
10.30 a.m. : Principal's Tea
11.00 a.m. : A.G.M
12.30 p.m. : Fellowship Lunch

Tickets - Rs. 1000/=

All old girls are cordially invited

Secretary

(cs.55231) (N-1)

## மரண அறிவித்தல்

தோற்றம் 08 . 03 . 1947



மறைவு 29 . 05 . 2024

### பரமசாமி வள்ளிப்பிள்ளை

யாழ்ப்பாணம் நீர்வேலி மத்தியை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட பரமசாமி வள்ளிப்பிள்ளை (29.05.2024) புதன்கிழமை அன்று இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்ற காசிப்பிள்ளை தெய்வானைப்பிள்ளை தம்பதியரின் அன்பு மகளும் காலஞ்சென்ற தம்பையா பார்வதிப்பிள்ளை தம்பதியரின் அன்பு மருமகளும், காலஞ்சென்ற சிதம்பரப்பிள்ளையின் பாசமிகு சகோதரியும், காலஞ்சென்ற யோகரட்ணத்தின் அன்பு மைத்துனியும் நந்தகுமார்-வாசுகி, நடனகுமார்-ஞானராணி (லண்டன்) சிவகுமார்-ஜீவலக்சுமி, செந்தூர்செல்வா-பகீரதி, சாந்தகுமார்-ஜெயவதனி ஆகியோரின் அன்பு மாமியும், கஜேந்திரன், வதனி, ஹரிஷாந் (லண்டன்), இனோஜிகா, மேனுசன், நிதர்ஷனா, டயானிகா, கஜலக்ஷன் ஆகியோரின் அன்பு பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் ஞாயிற்றுக்கிழமை (02.06.2024) அவரது இல்லத்தில் நடைபெற்று மு.ப 10.00 மணியளவில் பூதவுடல் தகனக் கிரியைகளுக்காக நீர்வேலி சீயாக்காடு இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளும்படி கேட்டுக்கொள்கின்றோம்.


தகவல்:
பிள்ளைகள், மருமக்கள், மற்றும் பேரப்பிள்ளைகள்.

நீர்வேலி மத்தி,
நீர்வேலி.

நடா லண்டன் (ராசன்)- +44 740 415 5891
சிவம் (நீர்வேலி) - 077 028 6189

(CS 626) V-1

# முதலாம் ஆண்டு நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்



"எந்நன்றி கொன்றார்க்கும் உய்வுண்டாம் உய்வில்லை
செய்நன்றி கொன்ற மகற்கு"

எமது குடும்பத்தின் குல விளக்காக திகழ்ந்து அணைந்த
எமது அன்பு தெய்வம்

## அமரர் மாணிக்கம் இந்திரகுமார்

(திதி: வைகாசி மாத தேய்பிறை தசமி)

அவர்களின் சிவபதம் எய்திய செய்தி கேட்டு எமக்கு பல வழிகளில் தோளோடு தோள் நின்று எங்களின் குடும்பத்தில் ஒன்றி அவரின் கடமைகளை சிறப்பாக செய்ய உதவியவர்களிற்கும் ஆறுதல் கூறி ஆகாரம் அளித்தவர்களுக்கும், தொலைபேசி வாயிலாகவும், சமூக வலைத்தளம் ஊடாகவும் ஆறுதல் வார்த்தைகளைப் பகிர்ந்தவர்களுக்கும், இரங்கல்செய்தி அனுப்பியவர்களுக்கும், பல்வேறுவழிகளில் எமது குல விளக்கிற்கு மருத்துவரீதியில் உதவி செய்த வைத்தியர்களிற்கும், மருத்துவமனை ஊழியர்களிற்கும், கண்ணீர் அஞ்சலி பிரசுரம் வழங்கி துயர் பகிர்ந்த உள்ளங்களுக்கும், இறுதிக் கிரியையில் பல சேவைகள் வழங்கிய உறவினர், நண்பர்களுக்கும், ஊர்மக்களிற்கும் அத்துடன் அந்தியேட்டி மற்றும் வீட்டுக்கிரியைகளில் கலந்து சிறப்பித்த அனைவரிற்கும் எங்கள் மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

மண்ணில் 09.09.1955

விண்ணில் 13.06.2023

தெற்கு, புலோலி.

குடும்பத்தினர்.
076 846 9671

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### வடக்கு மாணவிகளுக்கு

# சுகாதார அணையாடை வழங்கல் எதிர்வரும் 6ஆம் திகதி ஆரம்பம்

யாழ்ப்பாணம், ஜூன் 1

வடக்கு மாகாணத்தில் தெரிவு செய்யப்பட்ட அதிகஷ்ட மற்றும், கஷ்டப் பாடசாலைகளில் பருவமடைந்த தரம் ஆறு தொடக்கம் உயர்தரம் வரையான மாணவிகளுக்கு சுகாதார அணையாடைக்கான (நப்கின்) வவுச்சர்கள் வழங்கி வைக்கும் திட்டம் எதிர்வரும் 6ஆம் திகதி ஆரம்பிக்கப்படவுள்ளது என வடக்கு மாகாண கல்விப் பணிப்பாளர் ரி. யோன் குயின்ரஸ் தெரிவித்துள்ளார்.

இதற்காக வடக்கு மாகாணத்தில் சுமார் 31 ஆயிரத்து 900 மாணவிகள் தெரிவு செய்யப்படடுள்ளதாகவும் ஆயிரத்து 200 ரூபா பெறுமதியான வவுச்சர்கள் இரண்டு தடவைகளில்தலா 600 ரூபா அடிப்படையில் வழங்கிவைக்கப்படவுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ-ஒ-214)

### மொட்டு முட்டுக்கொடுக்காமல்

# ரணில் மீண்டும் வெல்லமுடியாது

கொழும்பு, ஜூன் 1

சிறிலங்கா பொதுஜன பெரமுன கட்சியின் ஆதரவு இல்லாவிட்டால் ஜனாதிபதி தேர்தலில் ரணில் விக்கிரமசிங்கவால் வெற்றிபெறமுடியாது என்று மொட்டுக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் சஞ்ஜீவ எதிரிமான்ன தெரிவித்தார்.

தற்போதைய ஜனாதிபதி எவ்வாறுதான் சிறப்பாக செயற்பட்டாலும் இரு பிரதான கட்சிகளின் ஆதரவு வியூகம் இன்றி களமிறங்கினால் அவரால் வெற்றிபெற முடியாது எனவும் அவர் கூறினார்.

அதேவேளை, ஜனாதிபதித் தேர்தல் நடத்தப்படும் என்பதை ஜனாதிபதி ரணில் உறுதிப்படுத்தியுள்ளார். இது விடயத்தில் அவர் அரசமைப்புக்கு முரணாக செயற்பட மாட்டார் என்ற நம்பிக்கை உள்ளது எனவும் சஞ்ஜீவ எதிரிமான்ன குறிப்பிட்டார். (அ-ஒ-44)

# இந்தியத் தூதுவர் அநுரவுடன் சந்திப்பு

கொழும்பு ஜூன் 1

இலங்கைக்கான இந்திய தூதுவர் சந்தோஷ் ஜாவுக்கும் தேசிய மக்கள் சக்தி தலைவர் அநுரகுமார திஸாநாயக்காவுக்குமிடையே முக்கியமான சந்திப்பொன்று இடம்பெற்றுள்ளது.

இந்தச் சந்திப்பின் போது இந்தியத் தூதுவர் சந்தோஷ் ஜா இலங்கைக்கும் இந்தியாவுக்குமிடையிலான இரு தரப்பு அபிவிருத்தித் திட்டங்கள் குறித்து விளக்க மளித்துள்ளார். இந்தச் சந்திப்பின் போது தேசிய மக்கள் சக்தி இந்தியாவுடன் இணைந்து செயற்படும் என அநுர குமார திஸாநாயக்கா தெரிவித்துள்ளார்.

தனது இந்தியப் பயணம் தேசிய மக்கள் சக்தியை சர்வ தேச மட்டத்துக்கு எடுத்துச்சென்றுள்ளது எனவும் அநுரகுமார திஸாநாயக்கா தெரிவித்துள்ளார். (அ-ஒ-6)

# பாதை தவறின் நாம் விலகுவோம்

### சாகர தெரிவிப்பு



கொழும்பு ஜூன் 1

அரசு தவறான வழியில் பயணிக்கும்பட்சத்தில் அரசில் இருந்து பொதுஜன பெரமுன கட்சி வெளியேறும் என்று அக்கட்சியின் செயலாளர் சாகர காரியவசம் தெரிவித்தார்.

கொழும்பில் நேற்று நடைபெற்ற ஊடக சந்திப்பின்போதே அவர் இவ்வாறு கூறினார். இது தொடர்பில் அவர் மேலும் கூறியவை வருமாறு;

தேர்தலை ஒத்திவைப்பது தொடர்பில் ஐக்கிய தேசியக் கட்சியின் பொதுச்செயலாளர் வெளியிட்டுள்ள அறிவிப்பை நாம் கண்டித்துள்ளோம். அந்த அறிவிப்புக்கும், எமது கட்சிக்கும் இடையில் எவ்வித தொடர்பும் இல்லை. முன்கூட்டியே தேர்தலை நடத்துமாறுதான் நாம் வலியுறுத்தி வருகின்றோம்.

ஐ.தே.க. பொதுச்செயலாளரின் அறிவிப்பு தொடர்பில் தனக்கு உடன்பாடு இல்லையெனில் ஜனாதிபதி அது பற்றி கட்சி தலைவர் என்ற வகையில் தெளிவுபடுத்த வேண்டும்.

தற்போதைய அரசு தவறான முடிவுகளை எடுக்கும் பட்சத்தில் அதற்கு ஆதரவு வழங்கப்படமாட்டாது. அரசில் இருந்துகூட வெளியேறுவதற்கு நாம் தயாராகவே இருக்கின்றோம் - என்றார். (அ-ஒ-44)

### உக்ரைனில் போரிடும்

# இலங்கையர் தொடர்பில் ஏன் மௌனம்?

### ரஷ்யத் தூதுவர் கேள்வி

கொழும்பு, ஜூன் 1

இலங்கை இராணுவத்திலிருந்து ஓய்வுபெற்றவர்கள் ரஷ்ய இராணுவத்தில் பணியாற்றுவது தொடர்பில் கேள்வி எழுப்பும் இலங்கை ஊடகங்கள், உக்ரைன் இராணுவத்தில் முன்னாள் இலங்கை இராணுவத்தினர் போரிடுவது தொடர்பில் ஏன் கேள்விகளை எழுப்பவில்லை என இலங்கைக்கான ரஷ்யத் தூதுவர் ஊடக சந்திப்பில் கேள்வி எழுப்பினார்.

இலங்கை வெளிவிவகார அமைச்சில் இடம்பெற்ற ஊடக சந்திப்பிலேயே மேற்கண்டவாறு அவர் கேள்வி எழுப்பினார்.

இலங்கையில் ஊடகம் ஒன்றில் முன்பக்கத்தில் வெளிவந்த செய்தியைச் சுட்டிக்காட்டி, இந்த ஊடகங்கள் மேற்குலக நலன் சார்ந்து செயலாற்றுகின்றன என்றும் குறிப்பிட்டார். (அ-ஒ-6)



# போதை மாத்திரைகளுடன் வவு.வில் இளைஞர் கைது

வவுனியா, ஜூன் 1

வவுனியாவில் 80 போதை மாத்திரைகளுடன் இளைஞர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார் என மாவட்ட போதைத்தடுப்புப் பொலிஸார் தெரிவித்தனர். வவுனியா குருமன்காடு பகுதியில் மாவட்ட போதை ஒழிப்புப்பிரிவு பொலிஸ் பொறுப்பதிகாரி பொலிஸ் பரிசோதகர் கஜேந்திரன் தலைமையிலான குழுவினர் மேற்கொண்ட நட வடிக்கையின்போதே மேற்படி இளைஞர் கைது செய்யப்பட்டுள்ளதுடன், போதைப் பொருள்களும் மீட்கப்பட்டுள்ளன. (ம-18)

# மைத்திரியின் தடை நீடிப்பு

கொழும்பு, ஜூன் 1

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் தலைவராக முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன செயற்படுவதைத் தடுக்க விதிக்கப்பட்ட தடையை எதிர்வரும் 12ஆம் திகதி வரை நீடிக்குமாறு கொழும்பு மாவட்ட நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது. முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்கவால் தாக்கல் செய்யப்பட்ட முறைப்பாடு கடந்த புதன்கிழமை விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டபோதே இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டது.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் தலைவராகச் செயற்படுவதற்கு முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுக்கு சட்டபூர்வ உரிமை கிடையாது என முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க தனது முறைப்பாட்டில் தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (ச-இ)

# ரணிலும், விக்கியும் இந்திய முகவர்கள்

### சாடும் கஜேந்திரன்

யாழ்ப்பாணம், ஜூன் 1

இந்தியாவின் முகவராக இருக்கக்கூடிய ரணில் விக்கிரமசிங்கவை பலப்படுத்துகின்ற செயற்பாட்டிலேயே விக்னேஸ்வரன் தொடர்ந்து செயற்படுகின்றார். இவ்வாறு தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் நாடாளுமன்ற உறுப்பினர் செ.கஜேந்திரன் தெரிவித்தார்.

அண்மையில் அவர் நடத்திய ஊடக சந்திப்பிலேயே மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது;-

விக்னேஸ்வரனுக்கும் ரணில் விக்கிரமசிங்கவுக்கும் இடையில் எந்தவித இடைவெளியும் இருப்பதற்கான வாய்ப்பு இல்லை.

இன்று இந்திய, மேற்குலக நாடுகளுக்கு ரணில் விக்கிரமசிங்கவை வெற்றிபெறவைக்கவேண்டும் என்ற சூழல் இருக்கின்றது. தமிழ் இனம் சார்ந்த கட்டமைக்கப்பட்ட இன அழிப்பை மேற்கொண்டுள்ள ரணில் வடக்குக்கு வருகை தருகின்ற பொழுது அவருக்கு செங்கம்பளம் விரித்து இவர்கள் வரவேற்பது கண்டிக்கத்தக்கது.

விக்னேஸ்வரன் தேர்தல்களைப் பிற்போடுவதை வரவேற்றிருக்கின்றார். ஆனால் குறித்த தேர்தல்கள் உரிய காலத்தில் நடத்தப்பட வேண்டும் என்பது தமிழ் தேசிய மக்கள் முன்ன்ணியினுடைய நிலைப்பாடாக காணப்படுகிறது.

தமிழ் மக்கள் பேரவையில் பல தேசிய கருத்தியல்களை உள்ளடக்கி விக்னேஸ்வரன் உள்ளே நுழைந்தார். ஆனால் இந்திய நிகழ்ச்சி நிரலின் அடிப்படையில் அவர் செயற்பட்டார்.

இந்தியாவைப் பிடி கொடுக்கக்கூடாது என்பதற்காக பொதுவேட்பாளர் விடயத்தில் இந்தியா இல்லை என விக்னேஸ்வரன் கூறினாலும் ரணில் விக்கிரமசிங்கவை வெல்ல வைக்க வேண்டுமானால் தமிழ் மக்கள் வாக்குச் சாவடிகளுக்கு செல்லவேண்டும். தமிழ் மக்களுக்கு அந்த மனநிலை இல்லை. ஆகவே வாக்குச் சாவடிகளுக்கு சென்று மக்கள் வாக்களிக்கும் மனநிலையை உருவாக்கவே இந்த பொதுவேட்பாளர் நாடகம்.

பொதுவேட்பாளர் யாரும் நிறுத்தப்பட்டால் கூட அவர் 72 மணித்தியாலயத்துக்கு முன்னர்,எமது கோரிக்கைகளை சிங்கள வேட்பாளர்களில் ஒரு தரப்பினர் ஏற்றுக் கொண்டுள்ளனர். அவருக்கு வாக்களியுங்கள் என கூறி பொதுவேட்பாளர் விலகக் கூடும். இல்லையெனில் இரண்டாவது விருப்பு வாக்கை சிங்கள வேட்பாளருக்கு வழங்கக்கூடும் - என்றார். (அ-ஒ-125)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திகதி...

தெரிவித்தார். 'எரியும் நினைவுகள்' ஆவணப்படத் திரையிடலும், கலந்துரையாடலும் கடந்த புதன்கிழமை யாழ். நூலகக் கேட்போர் கூடத்தில் இடம்பெற்றது. நூற்றுக்கும் அதிகமானோர் கலந்துகொண்ட இந்த நிகழ்வில், இயக்குநர் சோமீதரன் உரையாற்றும் போது;

யாழ்ப்பாண நூலக எரிப்புக் குறித்து நான் இயக்கிய 'எரியும் நினைவுகள்' ஆவணப்படத்தை யாழ். நூலகத்தில் திரையிடுவதே ஒரு போராட்டமாகத்தான் இருந்தது. 17 வருட முயற்சிக்குப் பின்னர் தான் அது சாத்தியமானது. 2007 இல் இந்த ஆவணப்படத்தை உருவாக்கியிருந்தேன்.

திடீரென நாட்டில் நிலவிய சமாதானச் சூழல் குழம்பியதால், இந்த ஆவணப்படத்துக்கு நேர்காணல் தருவதாகச் சொன்ன பலர் பின்னடித்தனர். அதையும் தாண்டி நேர்காணல் தந்த ஒருசிலரை நான் ஒளிப்பதிவு செய்தபோது, அவர்கள் இராணுவத்தால் மிரட்டப்பட்டனர். இவ்வாறெல்லாம் பலவித இடையூறுகளையும் தாண்டி, உருவான இந்தப் படத்தை யாழ். நூலகத்தில் திரையிட வேண்டுமென்பதே என் கனவாக இருந்தது. ஆனால், அதற்கும் பல தடைகள் போடப்பட்டன. சர்வதேசரீதியில் பலதிரைப்பட விழாக்களில் கலந்துகொண்டு, பல விருதுகளை வென்று, நூற்றுக்கணக்கான திரையிடல்களை 'எரியும் நினைவுகள்' ஆவணப்படம் சந்தித்த பின்னர் தான், அதாவது படம் உருவாக்கப்பட்டு 17 ஆண்டுகளின் பின்னரே என் கனவு நனவாகி, யாழ். நூலகத்தில் அதனைத் திரையிடும் சந்தர்ப்பம் கிடைத்துள்ளது. ஆனால் அதுகூட, அரசியல் பேசக்கூடாது என்ற நிபந்தனையோடுதான். நான் வாங்கிய விருதுகளை விடவும் யாழ். நூலகத்தில் இந்த ஆவணப்படத்தை திரையிடும் நிகழ்வுதான் என்னை நெகிழச் செய்கிறது.

யாழ். நூலக எரிப்புப்போல இனியொரு துயரம் மீளநிகழக்கூடாது என்ற நோக்கோடுதான் இந்த ஆவணப்படத்தை நான் உருவாக்கினேன். மீளநிகழாமை என்பதற்குள் எல்லாமே அடங்குகின்றன. போரைத் தொடங்குவதற்கான விதை எங்கு போடப்பட்டது என்பதற்கு காண்பிய சாட்சி யாழ். நூலகம் தான். அதனை எம் இளையோரிடம் பரவலடையச் செய்யவேண்டும்.

இன்னொருவிடயம் இங்கு முக்கியமானது. நூலகம் எப்போது எரிக்கப்பட்டது என்ற குழப்பமே அது. சிலர் 1981 மே 31 ஆம் திகதி இரவு எரிக்கப்பட்டதாகச் சொல்கிறார்கள். ஆனால், அது தவறு. 1981 ஜூன் முதலாம் திகதியே நூலகம் எரிக்கப்பட்டது.

மாவட்ட சபைத் தேர்தல் வேளையில் மே 31 ஆம் திகதி, தென்னிலங்கையில் இருந்து அழைத்துவரப்பட்டவர்களால் யாழ்ப்பாணத்தில் உள்ள கடைகள், கட்டடங்கள் என்பன தீக்கிரையாக்கப்பட்டன. அதன் பின்னரே, அடுத்தநாளே நூலகத்தை அவர்கள் திட்டமிட்டு எரித்தார்கள். மே 31 ஆம் திகதி நூலகம் எரிக்கப்பட்டதாகச் சொல்வதன் மூலம், மாவட்ட சபைத் தேர்தல் களேபரத்தில் தான் நூலகம் தற்செயலாக எரிக்கப்பட்டு விட்டதாகக் காட்ட சிலர் முனைகிறார்கள். எங்கள் கண்முன்னே ஜூன் முதலாம் திகதி நடந்த ஒரு வரலாற்றுத் துயரைக் கூட, மே 31 எனச் சிலர் கட்டமைப்பதிலும் ஓர் அரசியல் மறைந்தே இருக்கிறது - என்றார். (அ-ஒ-இ)

## தற்காலிக...

யில் தரம் - 4 இல் கல்வி பயிலும் மாணவிகள் இருவர், தற்காலிக ஆசிரியரால் தாக்கப்பட்டுள்ளதாகப் பெற்றோர் குற்றம்சுமத்துகின்றனர்.

இந்தச் சம்பவம் தொடர்பில் தெரியவருவதாவது:-

தரம் - 4 இல் 15 பேர் கல்வி கற்கின்றனர். வகுப்பாசிரியர் 5 மாணவர்களுக்கு மாத்திரம் கற்பித்துக்கொண்டு ஏனைய 10 மாணவர்களுக்கும் கற்பிக்க, ஆசிரியரல்லாத இளம்பெண் ஒருவரை நியமித்துள்ளார்.

இந்நிலையில் மாணவிகள் இருவர் பரீட்சையில் குறைவான புள்ளி எடுத்ததன் காரணமாக அவர்களை, தற்காலிக இணைப்பில் நியமிக்கப்பட்ட இளம்பெண் தடியால் அடித்துள்ளார். இதனையடுத்து இரு மாணவிகளின் பெற்றோரும் அதிபருடன் வாக்குவாதப்பட்டுள்ளனர்.

அதில் ஒரு பெற்றோர், தனது பிள்ளையின் உடலில் தழும்புகளுடன் உள்ள ஒளிப்படத்தை முகநூலில் தரவேற்றியுள்ளார். இதனையடுத்து பாடசாலை அதிபர், பெற்றோரை மீள அழைத்து இவ்வாறுபதிவிட்டால் மேலதிக பிரச்சினைகள் எழும் எனவும், தற்காலிகமாக நியமிக்கப்பட்ட இளம்பெண்ணை பாடசாலையிலிருந்து நிறுத்தியுள்ளதாகவும், வகுப்பாசிரியர் மீது திணைக்கள நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் தெரிவித்ததாக பெற்றோர் குறிப்பிடுகின்றனர்.

இது தொடர்பில் வலிகாமம் வலயக் கல்விப் பணிப்பாளரைக்கேட்டபோது, பாடசாலை தொடர்பில் இரு மாணவர்கள் தம்மிடையே முரண்பட்ட நிலையில் காயம் ஏற்பட்டதாக அறியமுடிகிறது. நாளைமறுதினம் திங்கட்கிழமையே விசாரணை முன்னெடுக்கும்போது நடந்தது தெரியவரும் - என்றார்.

இதேவேளை - மாணவர்களிடையே முரண்பாடு ஏற்படவில்லை எனச் சம்பந்தப்பட்ட இரு மாணவிகளினதும் பெற்றோர் தெரிவிக்கின்றனர். (அ-ஒ-125)

## தமிழ்க்...

மட்டக்களப்பில் கொலை செய்யப்பட்ட ஊடகவியலாளர் ஐ.நடேசனின் 20 ஆவது ஆண்டு நினைவேந்தல் யாழ். ஊடக அமையத்தால் நேற்று முன்னெடுக்கப்பட்டது. இந்த நினைவேந்தலில் பங்கேற்று அவர் மேலும் தெரிவித்ததாவது:-

ஊடகவியலாளர் நடேசனின் படுகொலை நடந்து 20 வருடங்கள் கடக்கின்ற நிலையில் இன்றுவரை அவருக்கான நீதி மறுக்கப்பட்டுள்ளது. கொலை செய்தவர்கள் யார் எனத் தெரிந்தும் மௌனம் சாதிக்கப்படுகின்றது. அவ்வாறே சிவராமும் கடத்தப்பட்டு கொல்லப்பட்டார்.

இவர்கள் மக்களுக்கு தமது எழுத்துமூலம் செய்திகளை வழங்கியமையும் உணர்வுபூர்வமாக சிந்திக்கத் தூண்டினர். இந்த நாட்டில் தமிழ் ஊடகவியலாளர்களுக்கு எது நடந்தாலும் கேட்பார் இல்லை. இதன் காரணமாக ஊடகப்பணிக்குள் வரப்பின்னடிக்கும் நிலை காணப்படுகிறது.

நிமலராஜனின் கொலையும் திட்டமிட்டு மேற்கொள்ளப்பட்டது. அதனை மேற்கொண்டவர்கள் யார் எனவும் அரசாங்கத்துக்கு நன்றாகத் தெரியும்.

நாங்கள் தளரக்கூடாது. ஊடகவியலாளர்களின் பலம் குன்றியுள்ளது. உண்மையில் ஊடகவியலாளர்கள் தான் எங்களுடைய தலைவிதியைத் தீர்மானிக்கக் கூடியவர்கள். இப்பொழுது நாங்கள் பிரிந்து பல்வேறு கிளைகளாக நிற்கின்றோம். எங்களுடைய ஒற்றுமையை வெளிப்படுத்தினால் போராடி எமக்கான நீதியைப் பெறலாம். இதனை நாங்கள் கருத்திற்கொள்ளவேண்டும்.

தமிழ்த் தேசியக் கட்சிகள் கோரிக்கைகளை முன்வைக்கின்றபொழுது ஒற்றுமையாக இணைந்து வாருங்கள் என ஜனாதிபதி ரணில் எள்ளி நகையாடுகின்றார். ஊடகங்கள் தமிழ்க் கட்சிகளை ஒற்றுமைப்படுத்தவேண்டும். தற்போது பொதுவேட்பாளர் விடயம் பேசப்படுகின்றது. அனைத்து ஊடகங்களும் இதை மக்கள் முன்கொண்டு சென்றால், தமிழர்கள் வெற்றியடையமுடியும். தமிழர்களுக்குடைய சொல்லைக் கேட்கின்ற நிலையை அரசாங்கத்துக்கு உருவாக்கலாம் - என்றார். (அ-ஒ-125)

## மீன்...

இடத்தையும் பெற்றுள்ளார். இது தொடர்பில் அந்த மாணவி தெரிவித்ததாவது:-

எனது தந்தை ஒரு மீன் வியாபாரி. பண்டத்தரிப்பு பெண்கள் உயர்தரப் பாடசாலையில் கல்வி கற்றேன். நான் சாந்தை கிராமத்தில் வசிக்கிறேன். எமது கிராமம் ஒரு பின்தங்கிய கிராமம். எமது கிராமத்தில் இருந்து யாழ்ப்பாண ரீதியில் சாதிக்கவேண்டும் என்பதே எனது கனவு. அதனை நிறைவேற்றியுள்ளேன்.

அன்றன்று கற்கின்ற விடயங்களை அன்றே வீட்டில் சென்று படிப்பதனால் கஷ்டம் இல்லாமல் இலகுவாகப் படிக்க முடியும். ஆசிரியர்கள் கற்பிக்கும்போது கவனத்தை சிதறவிடாமல் கற்கவேண்டும்.

தமிழ்ப் பாட விரிவுரையாளராக வரவேண்டும் என்பது தான் எனது கனவு. என்னை இந்த நிலைக்கு உருவாக்கிய பெற்றோர், அதிபர், ஆசிரியர்கள் மற்றும் நண்பர்கள் அனைவருக்கும் எனது நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன் - என்றார்.

மாணவியின் வெற்றியை கொண்டாடுவதற்கு அந்த ஊர் மக்கள் அனைவரும் அவரது வீட்டில் குழுமியிருந்தமை குறிப்பிடத்தக்கது. (அ-ஒ-27)

**அறை வாடகைக்கு தேவை**

யாழ் நகருக்கு அண்மையில் ஆண் ஒருவருக்கு அறை வாடகைக்கு தேவை.

தொடர்பு : 074 29 38 236

**காணி விற்பனைக்கு**

பொன்னாலை வீதி விதானை வளவு மானிப்பாயில் பிள்ளையார் கோயிலுக்கு அண்மையில் 500M தொலைவில் 2பரப்புக் காணியும், வீடும் விற்பனைக்கு உண்டு.
தரகர் தேவையில்லை.

தெடர்புகளுக்கு : 077 500 81 80

(CS 621) S-1

**வேலைக்கு ஆட்கள் தேவை**

ஆஸ்பத்திரி வீதியில் அமைந்துள்ள யோகு ரேடிங் CO இற்கு ஆட்கள் தேவை. மேலதிக விபரங்களுக்கு நேரில் சமுகமளிக்கவும். (மக்கள் வங்கி அருகாமையில்)

**பணிப் பெண் தேவை**

கோப்பாயில் உள்ள சிறிய குடும்பத்திற்கு தங்கி நின்று வேலைசெய்யக்கூடிய பணிப்பெண் தேவைப்படுகின்றார்.
சம்பளம் பேசித்தீர்மானிக்கப்படும்.

தொடர்பு: 077 960 8941

(CS 55235) N-1

**காணி விற்பனைக்கு உண்டு**

யாழ்ப்பாணம் நுணாவில் சாவகச்சேரியில் 14 பரப்பு காணி விற்பனைக்கு உண்டு.

- இரண்டு பரப்பாகவும் பிரிக்கப்பட்ட நிலையில்.
- குடியிருப்பு சூழ உள்ள பகுதி.
- A9 வீதியில் இருந்து மட்டுவில் செல்லும் றோட் இலுப்பையடி வீதி அரசன் கடை அருகாமை.
- பலன் தரும் மரங்கள் உண்டு.
- தரகர் தேவையில்லை.

தொடர்புகளுக்கு:

070 497 4565, 070 420 7345

**காணி விற்பனைக்கு**

வடமராட்சி, கம்பர்மலை, வல்வெட்டியில் பாதையுடன் கூடிய 6 1/2 பரப்பு விஸ்தீரணமும் மற்றும் அதனையடுத்த (Adjoining Land) சுமார் 2 பரப்புமுடைய மொத்தம் இரண்டு வெற்றுக்காணிகள் விற்பனைக்குண்டு.

தொடர்பு : G.A. சூசைதாசன்

075 699 3719 / 077 902 7879

(Nc 55233- N-1)

**வேலைவாய்ப்பு**

இங்கிலாந்தில் உள்ள Software Company க்கு கீழ் வரும் Software language தகைமை உள்ளவர்கள் பணிக்கு சேர்க்கப்படவுள்ளார்கள். இவற்றில் ஏதாவது ஒரு Software language தெரிந்தால் அது போதுமானது.

1) Golang Developers -1 வருடம் அனுபவம்.
2) Flutter Developers - 1 வருடம் அனுபவம்.
3) Creative Graphics Designers - 1 வருடம் அனுபவம்.

உங்களது Biodata ஐ கீழ் காணும் Email முவரிக்கு உடனடியாக அனுப்பவும்.

HR@ntsretail.co.uk

(CS 55232) N-1

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சீர்கேட்டுடன் திருநெல்வேலி மீன்சந்தை

யாழ், ஜூன் 1 நல்லூர்ப் பிரதேசசபையின் ஆளுகைக்குட்பட்ட திருநெல்வேலி பொதுச்சந்தை வளாகத்தில் இயங்கி வரும் மீன்சந்தை யில் கடந்த சில தினங்களாக இலையான்களின் பெருக்கம் அதிகரித்துக் காணப்படுகிறது. அங்கு விற்பனை செய்யப்படும் மீன்களின் மீது அதிகளவில் இலையான்கள் மொய்ப்பதையும் காணமுடிகிறது. அங்கு சுகாதாரச் சீர்கேடு ஏற்படக்கூடிய நிலை உருவாகியுள்ளது. இதுதொடர்பில் பொறுப்பு வாய்ந்த சுகாதாரத் தரப்பினர் தகுந்த நடவடிக்கை எடுக்கவேண்டுமென நுகர்வோர் பலரும் கோரிக்கை விடுத்துள்ளனர். (ஒ-25-66)


## காணி விற்பனைக்கு

யாழ். கல்வியங்காட்டில் G.P.S விளையாட்டரங்கிற்கு முன்னால் 11 பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு.
Call/ Whatsapp
தொடர்புகளுக்கு: 077 415 4375

## வேலையாள்கள் தேவை

உணவகமொன்றுக்கு சமையல் மற்றும் ரொட்டி வேலைக்கு ஆள்கள் தேவை.
தொடர்புகளுக்கு: 077 317 1908

## Techna

Technical Institute

A/L தொழினுட்பப்பிரிவு

A/L 2023 (2024) உயர்தரப் பரீட்சையில் தொழினுட்பப்பிரிவில் மிகச்சிறந்த பெறுபேறுகளை பெற்ற எமது மாணவர்களை

பாராட்டி வாழ்த்துகின்றோம்

### உயிர் முறைமைகள் தொழினுட்பவியல்

| பெயர் | பெறுபேறு | மா. நிலை | பெயர் | பெறுபேறு | மா. நிலை |
|---|---|---|---|---|---|
| ந.கிஷாந்தி | A 2B | 06 | த.வனிதா | A 2C | 31 |
| சி.ஹார்னி | 2A C | 07 | ற.அபிஷா | B 2C | 32 |
| க.ஜக்சிகா | 2A C | 08 | ப.பேபிகா | B C S | 36 |
| ந.றஜோஸினி | A 2B | 12 | சி.செளமியா | B 2C | 37 |
| த.கிருபாஜினி | A B C | 14 | க.டனுசா | 3C | 38 |
| நா.அபிசா | 2B C | 15 | வ.கபிஷாளினி | B 2C | 39 |
| ச.நிதுசா | A 2B | 17 | ஹெ.நிஷர்மி | 3C | 41 |
| பி. அபிராம் | B 2C | 22 | ரா. பாதுஷா | 3C | 43 |
| கே.நிதுஷா | A 2C | 29 | சி.கபிநயா | 3C | 47 |
| சி.சிந்துஜன் | B 2C | 30 | ஜெ.நிதர்ஷனா | 3C | 50 |

### பொறியியல் தொழினுட்பவியல்

| பெயர் | பெறுபேறு | மா. நிலை | பெயர் | பெறுபேறு | மா. நிலை |
|---|---|---|---|---|---|
| ச.அனிலக்சன் | 2C S | 05 | சி.பழூராம் | A 2C | 30 |
| வி.சதுர்சன் | A B C | 07 | வி.அஜய் | 3C | 36 |
| கொ.டெல்சிகன் | 2C S | 08 | ர. பிரசாந்த் | B 2C | 37 |
| கு.திசானுஜன் | A 2B | 10 | பி.திவிஸ்ரன் | B 2C | 39 |
| யோ.வினுஜன் | 3B | 11 | அ.சாமுவேல் | 3C | 40 |
| யோ.திருசன் | A B C | 15 | வி.கம்சி | 3C | 49 |
| அ.ஜிவிந்த் | 3S | 18 | ம. சிலக்சன் | B 2C | 50 |
| ற.றிலக்சன் | 3C | 20 | அ.டினுசன் | 2C S | 54 |
| அ.லக்சன் | B 2C | 27 | மு.மாதங்கி | 3C | 58 |

A/L 2023 REPEAT BATCH ஆரம்பம் 02.06.2024 ஞாயிற்றுக்கிழமை காலை 8 மணி
வீரசிங்கம் மண்டபம், 3ஆம் மாடி, யாழ்ப்பாணம்.
077 170 3549

## வேலையாட்கள் தேவை

யாழ்ப்பாணம், சாவகச்சேரி, நுணாவில் ஆகிய இடங்களில் இயங்கிவரும் பிரபல வியாபார நிறுவனங்களுக்கு கீழ்வரும் வெற்றிடங்களுக்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

- களஞ்சியக்காப்பாளர்
- விற்பனைப் பிரதிநிதி
- கணக்கீட்டு உதவியாளர்
- சாரதி
- காட்சியறை விற்பனையாளர் (இருபாலாரும்)
- பொதியிடுவோர் (பெண்கள்)

தொடர்பு: 077 991 5465

## காணி விற்பனைக்கு

யாழ்ப்பாணம் கைதடி சந்தி அருகாமையில் A-9 வீதி முகப்புடன் 51 பரப்பு காணி விற்பனைக்குண்டு.

- இரண்டு பரப்பாக பிரிக்கப்பட்ட நிலையில்
- பதினெட்டடி பாதை (18)
- கைதடிச் சந்தி 100M தூரம்
- சித்த வைத்தியசாலை முன்பாக
- பார்வை நேரம் காலை 6 மணி தொடக்கம் மாலை 6 மணி வரை
- நகர அபிவிருத்தி அதிகார சபையின் (UDA) அனுமதி பெற்றது

தொ: 077-029 4164, 077-329 4130, 077-294 1521


# மூன்றாம் ஆண்டு நினைவஞ்சலி




அப்பா என்றும் உங்கள் நினைவில்..

## அமரர் சிதம்பரன் திருஞானசிவம்

(உரிமையாளர் – சிதம்பரன் களஞ்சியம், கைதடிச்சந்தி, ஓய்வு பெற்ற உத்தியோகத்தர் – நீர்ப்பாசனத் திணைக்களம்)

எங்கள் குடும்ப விருட்சம் தழைக்க ஆணிவேராக நின்று நிழல் தந்து இவ்வுலகில் நாம் சிறப்புடன் வாழ ஏற்ற வழிவகைகள் எல்லாம் செய்து இன்சொல்தனை இனிதாகப் பேசி எல்லோர் மனதிலும் எளிமையாய் தவழ்ந்து விண்ணில் ஒளிவீச சிவலோகம் சென்று இன்று தெய்வமாகி விட்டீர்கள் அப்பா எங்கள் வாழ்வு, சொல், செயல் எல்லாவற்றிலும் இன்றும் எங்கள் கூட இருந்து வழிநடத்துகின்றீர்கள் அப்பா.



மண்ணில் 29.11.1946 விண்ணில் 04.06.2021

இன்று (01.06.2024) சனிக்கிழமை கைதடியில் அவரது இல்லத்தில் முற்பகல் 11.00 மணியளவில் மூன்றாம் ஆண்டு நினைவஞ்சலியும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையும் இடம்பெறும். அதனைத் தொடர்ந்து மதிய போசன நிகழ்வும் இடம்பெறும். அத்தருணம் தாங்களும் தங்கள் குடும்ப சகிதம் வருகை தருமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

"திருத்தணிகை"
கைதடி மத்தி, கைதடி.

பிரிவால் துயருறும்
குடும்பத்தினர்

(CS/55151) J-1

செய்தி : 021 493 0000 – விளம்பரம் : 021-493 1111 செய்தி : news@uthayan.com விளம்பரம்:advt@uthayan.com
இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 01.06. 2024 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org